1433

KALANILAYAM

தனிப்பிரதி ரு. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரு. 7 8 0

புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம் சென்னை.

Vol 4.] 1931 ஹு நவம்பர் மீ 5உ [No. 44.

18DEC 931
MADRAS

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	861
2.	ஆண்டாள்—(மதமும் சித்தாந்தமும்) E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L.	863
3.	சிதம்பரதேவர் சரிதம். Dr. V. S. அருணாசலம்பிள்ளை	865
4	கந்தபுராணமும் சங்க நூல்களும் பண்டிதர் S. R. திம்மப்பா ஐயர்	867
5.	களவியற் காரிகை S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L.	870
6.	சூளாமணி - (தூதுவிடு சருக்கம் 1—10) K. இராமரத்நம்ஐயர் B.A.	872
7.	யாப்பிலக்கணம் (கொச்சகக் கலிப்பா)	874
8.	கம்பராமாயணம் (ஆறுசெல் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	876
9.	வர்த்தமானம்.	879

கலாநிலயம்

18894

நல்லாள் நகை. 1.

விபரீதத்திற்கும் ஒரு விதி யிருக்கின்றது. கோசல நாட்டில்"கொள்வாரிலாமை கொடுப்பாருமில்லை" என்று இன்று நினைப்பவர்தம் மனமெலாம் தித்திக்க இயம்பினார் அக் கம்பர். இரப்பார் இல்லாததொரு அரியநிலையை அமைத்தது இவ்வாசகம். ஆயினும் கொடுப்பாரில்லாத குறையொன்று அந்நாட்டின்கண் இருந்தாற்போல் இசைத்தனர். அந்த நயத்தைப்பற்றி யன்று நாமிங்கு இயம்பவருவது. இரத்தலென்பது இலதாக ஈகையுமில்லாததாயிற்று என்னும் அப்புலவர்பெருமானார் கருத்து வெளிப்படை. தற்காலம், புலவர் சொற்களெல்லாம் பொய்யென்றும் தம்முடைய அறிவினால் செய்துகொள்ளும் ஆராய்ச்சியே மெய்யென்றும் எண்ணிக்கிடக்கும் மாந்தர் இரவலரே இல்லாத தேயமும் இருக்குமோ என்று நகைப்பார். ஆயினும் இத்தகையோரில் எண்ணிறந்தோர் பிச்சைக்காரர்கள் இல்லாதபடி செய்வதற்குத்தாம் முயல்கின்றாரென்றும் கூறக்கேட்கின்றோம். இம்முயற்சிக்கு அவர்களைத் தூண்டுகின்ற நோக்கம் பெரும்பாலும் 'பிச்சைக்காரர் உபத்திரவம்' என்பது அவர் வாய்நின்றே வெளியாகும். இரவலர்க்கிரங்கி அவர் எளிமையைத் தீர்ப்பதனினும் அவர்களை முனிந்து அவர்தாமே இல்லாமலொழியும்படி செய்யவே நினைத்தவர் இவ்வுபகாரிகள். இந்நினைவிற்கு, இவர் வற்புறுத்தும் முறையுந் தக்கதே. ஈவோர் சிலர் இருப்பதாலன்றோ இரந்து பலர் பிச்சை ஏற்கவும் வருகின்றார்— ஆதலின், ஒருவருக்கும் ஒன்றும் கொடுக்காதபடி செய்துவிட்டால், பிறகு பிச்சைக்காரர் இனமே இல்லாதுபோதல் இன்றியமையாததாகிவிடும் என்பது அன்னார் தர்க்கமுறையினிற் பிறழாதடங்கும் முடிவாகும். ஆன்றோர் முறைக்கும் அல்லாதார் முறைக்கும் உள்ள வரன்முறையின் வேறுபாடிதுவே. கொள்வாரிலாமையாற் கொடுப்பாரிலையாகச் சிந்தித்த செம்மையோர் அவர்; இவர்,கொடுப்பாரிலாமையால் கொள்வாரிலையாகச் சாதிக்கச் செப்புகின்றார். நோய் தீர்வதற்கு அந்நோயாளனையே மாய்ப்பதை யொக்கும் இம்மதி. எனினும் இதற்கிணையாய இன்னொரு கொள்கையையும் இதனுடன் சேர்த்து நோக்கலாம். கொள்வாரிலாமைக் கோசலத்தில் பொருள்காவலு மில்லையென நிகழ்த்தினார் புலவர்பெருமான். இன்றைக்கோ காவலின் திறமையால் தம் பொருளினைக் கள்வாது கைக்கெட்டாமல் வைத்திருந்தாற் போதும் என்னும் புந்தியராயிருக்கின்றனர். முன்,ஊடிய மகளிராவார் வாயில் மறுக்குந் தம் துணிவினைத் தோற்றுவித்தற் கல்லால் தாழ்கோலிட்ட கதவங்களிருந்ததில்லை.அத்தாழ்கோல் இரட்டையாவதும் ஒட்டக்கூத்தன் பாட்டிற்கே.மற்றவெல்லாம் அடையாத வாயிலகம். இன்றைய கதியென்ன? பகலெல்லாம் பிச்சைக்காரருக்கு ஒரு தாழ்கோல், இரவெல்லாம் கள்வருக்கு ஒரு தாழ்கோல்; சிற்சிலர் வீட்டில் கடன்காரருக்காகத் தாழ்கோல் இருபொழுதும் இட்டபடியே இருக்கத்தான் வேண்டும்.

கொள்வார் இலாமையால் கொடையும் கள்வார் இலாமையால் காவலும் இல்லையென்ற நிலைமைதான் போயிற்றெனின் அந்நினைவுந்தான் போய், உலோபத்தால் இரவையும் காவலாற் களவையும் விலக்குதலென்னும் இக் கொள்கைகளனைய விபரீதம் வேறு வேண்டுமோ. மற்றினி, இவ்விபரீதங்கள் எவ்விதிக்கிணங்கி விளைந்த வென்பதை ஒருசிறிது ஆராயப் பயன்தரும்.

M31.4.44

ஈதலன்றி வேறோர் ஊதியம் உயிரிற்கில்லை யென்ற கொள்கையை உணர்ந்துயர்ந்த காலம் அக்காலம்; தான் தான் துய்த்தலே கடனெனக்கிடக்கின்ற காலம் இது. வரையிலா ஈகையால் முன்னாள் இரவுங் களவுமில்லா தொழிந்தன. துய்ப்பேமென்னும் இக்காலத்தில் பொய்ப் புலன்கள் வாய்ப்பட்டுக் கள்ளமும் வறுமையும் கிளர்ந் துந்தளர்ந்தும் எங்கும் மலியாதென் செய்யும். தற்காலப் பொருளாதாய நிபுணர்களும் குடிவாழ்க்கை முறை யமைப்புத் திருத்தக்காரர்களும், சிலர்கைச் சேர்ந்த செல்வமே பலருடைய வறுமைக்குக் காரணம் என் பர். இது பேதைமை. சிலருடையசெல்வத்தின் மிகை யன்று மற்றவரை வறியராக்குவது—எல்லோர்க்கும் இருக்கும் உலோபம்மலிந்த சிறுமையே உலகின் வறு மைக்குக் காரணம். அவர் கரவே பலருடைய களவிற் குக் காரணம். துய்ப்பேமென்பர் காத்தலே வேண்டும்; எனின் வறுமையுங் களவும் வளராதொழிதல் எங் ஙனம்! மற்றுக் கரவையே இவைகளுக்கு மருந்தாக விளம்புவார்தமை என்சொலி வியப்போம்.

இரவுங்களவும் இரட்டைப்பிள்ளையென ஈன்றெடுத்து வளர்க்கும் ஓர் பேய்மகளனைய இக்கரவு இன்று தலைவிரித்தாடுதற்குக் காரணம் யாதெனப் பல கழற வேண்டுமோ! துய்ப்பதற்கென் றமைந்த பொருள்கள் உளவென்னுங் கொள்கையும், அப்பொருள்களை நுகர் வதால் இன்பம் அல்லது சுகம் எய்தும் என்னும் எண்ணமும், அச்சுகங்களைத் தான் துய்க்கவேண்டு மென்னும் அவாவும், ஒன்றோடொன்று சேர்ந்தும் மயங்கியும் கடைகின்ற நெஞ்சே இயல்வது கரக்கின்ற நஞ்சாகத்திரிகின்றது. ரேடியோ முதலிய கருவிகளைக் கண்டுபிடித்த மார்க்கோனி என்பவர்,

> "விஞ்ஞான சாஸ்திரத்தின் அபிவிருத்தியினால் எல்லாச் சாமான்களும் மலிவாகக் கிடைக்கக் கூடிய சௌகரியங்கள் ஏற்படும். இதனால் இப்பொழுது பணக்காரர்கள் மட்டும் அனுபவிக்கக்கூடிய சுகபோகங்களை ஏழைகளும் அனுபவிக்கக்கூடும்...........வருங்காலத்தில் கம்பியில்லாத டெலிபோன்மூலம் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் உள்ள ஜனங்கள் பரஸ்பரம் பேசிக்கொள்ள முடியுமாதலால், இப்பொழுது ஏற்பட்டுள்ள மனஸ்தாபங்கள் முதலியன அப்பொழுது ஏற்படா"

என்று கருதுகின்றார். இந்த வட்டமேசை மகாநாட்டில் எல்லாரும் சந்தித்துப் பரஸ்பரம் பேசிக்கொள்ள முடிந்ததால் ஏற்பட்டுள்ள மனஸ்தாபங்கள் அதன் முன் அவ்வளவிருந்ததில்லை என்று நினைக்கின்றோம். இதுகிடக்க, பணக்காரர்கள், தம் பணத்தினால் சுக போகங்களை அநுபவிக்கின்றனர் என்னுமோர் நினைவு எத்துணை இவ்வுலகினரிடையே ஆழ்ந்துகிடக்கின்ற தென்பதைக் காட்டுதற்குமட்டுமே மார்க்கோனியின் மொழிகளை இங்கு எடுத்தெழுதினோம்.

இப்படித் துய்ப்போமென்று துடிப்போமாயின் தப் புனபலவே. இன்பமென்ப தொன்று தமக்கு அயலாய வைகளினின்று வருவதற்குளதென்னுங் கருத்தினால் இருட்டறைப்பட்ட குருடரென்னப் பொருள்களுக் காகத் துழாவிச் சுழல்கின்றனர் மாந்தர். இத்தகையோர் ஒருவரோ டொருவர் எம்மருங்கு மிடைந்து மோதிய தலையும் இடறியகால்களும் பற்றிய கைகளும் உடைய ராய் இருளினை உழுது உழுது அவாவினை விதைத்து, சென்றவாரம் "சபரி" இவ்விதழ்களில் பெயர்த்தெழுதிய நாலடிச் செய்யுளிற் குறித்தபடி "இனிதுண்ணேம் ஆரப்பெறேம் யாம்" என்னும் முனிவினால் துஞ்சாத கயமைக் கண்ணீர் வார்த்து வளர்த்தபயிர் யாவதாகுமென இயம்பிக் காட்டுதலினும் எண்ணிக் கொள்வதே நலம்.

எனின், நுகர்ச்சியில் நினைவு மேன்மேலுஞ் செல் லச்செல்ல உலோபம் ஒருபுறமும் களவு மறுபுறமும் நேருக்குநேர் அதிகமாகவேண்டுமென்பது இன்றியமையாத தாகின்றது. மற்று, அந் நுகர்ச்சியெனும் நினைவு வலிவடைவதற்கு உதவியாயிருப்பவைகளெல் லாம், கரவையுங் களவையும் கள்ளியும் முள்ளியும் போல் நாளுக்கு நாள் மிகுதியாகப் படர்ந் தடர்விக்க வேண்டுமென்பதும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய தொன்றே. நுகரலாம் என்னு மவ்வெண்ணத்தை உறை விக்குங் கருவியே இந்தப் பணம்.

பற்பல பண்டங்களைப் புலன்களுக்கு ஏற்றவாறு பற்பல விதங்களில் நுகர முயல்கின்றனர் மாந்தர். மற்றிப் பண்டங்களின் நுகர்ச்சிக்கோ அளவாலுங் காலத்தாலும் எல்லையுள்ளது. உணவுப்பொருள்களை உதாரணமாய் எடுத்துக்கொள்வோம். எத்துணை சுய நய முடையவனும் தன் வயிறு நிறைந்தபின்னும், நாளுக்கு நான்கு வேளைகளுக்கு மேலும் உட்கொள்ள இயலாது. எஞ்சியது சமைத்திருப்பின் சிறிது பொழுதிலும், சமைக்காததாயின் சில நாட்களிலேனும் அவனுக் குப் பயன்படாவகை அழிந்தே தீர வேண்டும். ஆதலின், தனக்குவேண்டிய அளவிலும் அதிகமாய்ப் பண்டங்களை வைத்திருப்பதால் அவனுக்கு யாதும் பயனில்லை. அல்லது, பேராசைப் பேதைமையால் தன்னால் துய்க்கக் கூடியதைவிட இருமடங்கு மும்மடங்கு அதிகமாய்ப் பொத்திவைத்துக் கொள்ளலாம். அதன் மேல் என் செய்வான். வீணுக்குப் பண்டங்களை மிகையாக வைத்துக் காத்த கஷ்டங்களல்லால் அவன் கண்ட பயன் வேறிருத்தலாகாதே. ஆதலால், எஞ்சிய பண்டங்களையேனும் மற்றவர்க்குக் கொடுத்துவிட நேரிடலாம். கரவே கருத்தாயிருப்பதில் காரியமில்லை. உண்டிப்பண்டங்களுக்குரிய இது மற்றெல்லாவற்றிற் கும் பொருந்தும். இனி இதனில் இன்னொருகருத்து முளது. தன்னுடைய நுகர்ச்சியினது அளவை மனிதன் தெரிந்துகொண்டதும், அவ்வளவிற்கு மிகுதியும் அதிகமாய்ப் பண்டங்களைத் தேட முயலமாட்டான். நுகரவேண்டும் என்னும் அவா மிகப் பெரியதாயிருக் கலாமாயினும் அந்தத்தி லொருவன் நுகரக்கூடிய பொருள்களும் அவைகளின் அளவும் மிகக் குறைந் தனவே. எனின், அவனவன் தனக்குவேண்டிய பண் டங்களை விரும்பியவளவு ஈட்டியபின், கடவுளைப் பற்றி நினைக்கவும், கலைகளைப் பயிலவும், நல்லோருறவு நாடவும் நேரமிருக்கும். நேரந்தா னிருக்குமெனில் ஒருபோதல்லால் ஒருபோது கடவுளை நினையாமற் றீராது, கலைகளைப் பயிலாமற் றீராது, நல்லோரை நாடாமற் றீராது. மற்றிவையனைய நலங்களால் துய்ப்பதென்னும் மயக்கம் மெல்ல மெல்லத் தெளிய, அவாவும் பின்னிடைந்து போகின்ற செவ்வி வாய்க்கும். இதற்கெல்லாம் பகையாயிருப்பது பணம்; அதன் உருவத்தையுங் கரு[illegible] பார்ப்போம்.

கற்பக நூலகம்
சென்னை-600 00

ஆண்டாள்

4. ஆண்டாள் மதமும் சித்தாந்தமும்.

[851-வது பக்கத் தொடர்ச்சி]

1. ஆண்டாள் சமரசம்—மதாதீத நிலை

ஆண்டாள் சமயம் யாது என இனி வினவுவோம். அவர் வைணவசமயத்தவரென்பதுசாதாரணவிடையாம். ஆயினும் இவர் வைணவத்திற்கும் ஏனையோர் வைணவத்திற்கும் பேதம் சாலவுளது. இவர்பாடிய 173 செய்யுட்களில் கண்ணன் என்னும் தெய்வமே தெய்வமாகக்கொண்டும் அவனைக் கணவனாகக் கொண்டும் பாடினாரேயன்றி ஏனைய மதங்களின் தெய்வங்களின் மூர்த்தங்களை இழித்துக் கூறவில்லை. மற்றைய ஆழ்வார்கள் சமயவழக்குக் குட்பட்டவர்களாய்க் காணப் படுகின்றார். வைணவத்தின் தலையாய நம்மாழ்வார்

நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிரொளி யிமையவர் தலைவனும் முதலா
யாவகை யுலகமும் யாவரும் அகப்பட
நிலம்நீர் தீகால் சுடரிரு விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க
ஒருபொருள் புறப்பா டின்றி முழுவதும்
அகப்படக் கரந்தோ ராலிலை சேர்ந்தவெம்
பெருமா மாயனை யல்லது
ஒருமா தெய்வமற் றுடையமோ யாமே?

இயற்பா - திருவாசிரியம் 7.

என்றும், தொண்டரடிப்பொடியாழ்வார், [காண்பான்
பெண்ணுலாஞ் சடையினானும் பிரமனு முன்னைக்
எண்ணிலா வூழியூழி தவஞ்செய்தார் வெள்கிநிற்ப
விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கன் றருளையீந்த
கண்ணறா வுன்னை யென்னோ களைகணாக் கருதுமாறே

திருமாலை 44.

என்றும், திருமழிசையாழ்வார்,

இனியறிந்தே னீசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தே னெம்பெருமா னுன்னை-யினியறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாராணன்நீ நன்கறிந்தேன் நான்

இயற்பா - நான்முகன் திருவந்தாதி 96.

என்றும் பாடியவாறு புறச்சமயதூஷணம் இவ்வம்மையார்பதிகத்தில் ஒன்றேனுமில்லை. எனக்குரியவன்வாசுதேவன் அவனருள் பெறவே யான் வேண்டுகின்றேன்.

"இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி"

என்றார். இவன் சுடலைநோய் தீர்ப்பவன் என்பர். இவர் திருமாலுக்குக் கூறுகின்ற குணங்கள் யாவும் எல்லா மதத்தரும் தத்தம்தெய்வத்தின் சிறப்பெனும்படி நிற் கின்றதாதலால், இவர் மதம் யாவருக்கும் சம்மதமான சமரச சன்மார்க்க மென்பது திண்ணம்.

2. ஆண்டாள்காலத்தில் வழங்கிய வேதாந்தவிசாரணை

ஆண்டாள்காலம் சைவசமயாசாரிகள் காலத்திற் குப் பன்னாள் பிற்பட்டதென்பதை முன்னரே கண்டோம். அவர்காலத்தில் தமிழ்நாட்டில் அன்னக் கொடையைக்குறிக்கும் வெள்ளைக்கொடியும், வெண் சங்கமூதலும் சைவசமயாசாரிகள் நிறுவியதுபோல் நடைபெற்றுவரினும், சமணமதத்தைச் சிதைத்த காலத்திலிருந்த சைவவூக்கம் இவர் காலத்திலில்லை யென்பது வெளிப்படை. பௌத்தமதத்தை யொழிக்க நாஸ்திக சித்தாந்தங்களின் சாரத்தைப் பிழிந்து "நானார்?" என்னும் உள்ளாராய்ச்சியை நிறுவிய சங்கராசாரியரது வேதாந்தமானது வெறும் பேச்சும் தெய்வநிந்தனையு முடையதாய் மாறலாயிற்று. அது சங்கரர் எண்ணமன்றாயினும், பாத்திரரல்லாதார் அதைக் கையாள முயன்றனர். அதனால் யாவும் பிரமம், பாவ புண்ணியம் எல்லாம் ஒன்று, நாமே கடவுள் என்னும் பேச்சு வளரலாயிற்று. இதையே தாயுமானவரும் கூறியவாறு,

பன்முகச் சமயநெறி படைத்தவரும்
யாங்களே கடவு ளென்றிடும்
பாதகத்தவரும் வாததர்க்கமிடு படிறருந்
தலைவணங்கிட

ஒரு புதிய ஆராய்ச்சி வைதிக முறையில் வேண்டுவது அவசியமாயிற்று. இதனால் ஆழ்வார்கள் வைணவ மதத்தை நிறுவி, சாரூபமே ஜீவன் அடையக்கூடிய முத்தியெனவும், சைவர்கூறிய சாயுச்சியமும் உண் மையில் * சாரூபந்தானென்றும், அதுவே பரமாத்மா வுடன் கலந்த நித்தியசூரியான நிலையென்றும் வற் புறுத்தித் தெய்வபக்தியை நிலைநிறுத்தினர்.

எனவே பக்திமார்க்கத்தாலே ஞானமார்க்கமடைவதே முக்கியகருத்தாய் ஆழ்வார், திருமாலின் திவ்ய மங்கள குணங்களை யெடுத்துப் போற்றி வழிபடலாயினர். இதை ஆண்டாள் திருப்பாவையிலும் மற்றும் சில பதிகங்களிலும் காணலாம்:—

அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி!
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி!
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி!
குன்று குடையா யெடுத்தாய் குணம்போற்றி!
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்!

திருப்பாவை 24.

இவ்வாறு பக்திமார்க்கத்தையே வற்புறுத்திய ஆழ்வார்களது பெரிய வாசனைவீசும் மண்டலத்தில் பிறந்தவர் கோதையாராவார்.

3. ஆண்டாள் தத்துவ ஆராய்ச்சி

இல்வாழ்க்கையில் மானிடரனுபவிக்கும் சிற்றின்ப நிலைபெறுதெனத் தெளிந்துணர்ந்த கோதையார், அ...

---

* உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றானை யன்று பேய்ச்சி
உடம்பருகு வித்தகனைக் கன்று மேய்த்து
விளையாட வல்லானை வரைமீ கானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சை கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையம் காக்கும்
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லை தலசயனத்தே.

பெரியதிருமொழி—5-வது திருமொழி 3.

ளைப்பிராயம்தொடங்கி என்றென்றும்நிலைத்திருக்கும் பரம்பொருளின் இன்பமேநாடி "உள்ளே யுருகி நையும்" முமூட்சு விலக்கணம் பெற்று விளங்கிஞரென்பது அவர் திருமொழிகளால் தெரியலாம். ஆயினும், உலகக்கட்டுப்பாடு ஒழுக்கமீனமின்றி இருக்கவேண்டுமென்றும் அறிந்தார். இதற்கு முன்னரே, அகப்பொருட்டுறையில் பரமனைக் கணவனென அடியார்கள் நாயகிபாவனையாய்ப் பாடியமரபு இவர் நன்கறிவாராதலால், உலகவழிபோல் கணவனைத் தான் நாடினவரேயென்றும், ஆனாலும் தான் சாமான்னிய மனிதரை வேண்டாது "ஊனிடையாழி சங்குடைய உத்தமனையே கணவனாய் நாடிஞரென்றும் வெளியிட்டார். அவ்வண்ணம் 1-ம் திருமொழியில் "பெண்மைத் தலையுடைத்தாக்கும் வண்ணம், கேசவ நம்பியைக் கால்பிடிப்பா"ளெனும் இப்பேறுவேண்டுவது முன்னோர் மரபேயாயினும், பெண்பாவனையைத் தம்மேல் ஆரோபித்துக்கொண்டு பரம்பொருளைப் புருடனாக ஆண்மக்கள் வேண்டுவதற்கும், பெண்ணாய்ப் பிறந்த இவ்வம்மையார் பாடுவதற்கும், நாம் பேதங் காண்கின்றோம். அதனால்இவ்வம்மையார்,உலகமுறையிற்பரமன் மனிதருபமாய் வந்து தன்னை மணஞ்செய்து சிற்றின்பம் நல்க வேண்டுமென்கிற எண்ணம் எண்ணிஞரோ எனின், அத்தகைய எண்ணம் இவ்வம்மையாருக்கும் சிறிதேனுமில்லையென்பது இவர் செய்யுட்களிலிருந்து நாம் அநுமானிக்கலாம். 6-வது திருமொழியாகிய வாரணமாயிரமென்னும் பதிகத்தின் கடைமுடிவாகிய அதன் 10-வது செய்யுளில்

குங்கும மப்பிக் குளிர்சாந்த மட்டித்து
மங்கல வீதி வலஞ்செய்து மணநீர்
அங்கவ னோடு முடன்சென்றங்கு யானைமேல்
மஞ்சன மாட்டக் கனக்கண்டேன் தோழிநான்

என யானையின்மேல் வரும் திருமஞ்சனமாய் மும்மலங்களும் கழுவப்பெற்ற முத்திபெறும் தன்மையை விளக்கிக் காட்டிஞரன்றி, உலகமணம்போல் பள்ளியறைக்குள் புகுந்ததாய்க் காட்டவில்லை. மன்மதனைக் குறித்துப் பாடுமிடத்து 1-ம் திருமொழியில் எவ்வளவு காமனை ஏசக்கூடுமோ, அவ்வளவு அவர் வஞ்சகப் புகழ்ச்சிநடையில் ஏசுவதைக் காணலாம். அவனைத் "தத்துவ மிலி"யென்று நெஞ்செரிந்து வாசகத்தழித்து வைவது சற்று நிதானித்து வாசிக்கும் மாணவர்களுக்கு நன்கு விளங்கும்.

எனவே ஆண்டாள் செய்த தத்துவ ஆராய்ச்சியின் முடிவானது பக்திக்கும் ஞானத்திற்கும் ஒத்ததாய்த் தமிழிலக்கண மரபில் அகப்பொருட் சுவைநிறைந்த தாய் நாயகிநாயக பாவனை வழிபாட்டில் செல்லலாயிற்று.

நடையொன் றில்லா வுலகத்து
நந்த கோபன் மகனென்னும்
கொடிய கடிய திருமாலால்
குளப்புக் கூறு கொளப்பட்டுப்
புடையும் பெயர கில்லேன்நான்
போட்கன் மிதித்த அடிப்பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து பூசிர்கள்
போகா வுயிரென் னுடம்பையே.

13 ம். திருமொழி-6.

என்று தனது ஆர்வத்தை விளக்கலாயினர். இவ்வாறு ஒருவகைப் பெருந்திணை யிலக்கணமாய்க் காஞ்சித்திணையில்

பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறி

யைத் தொல்காப்பியம் (புறத்திணையல் 78) குறிப்பிடுகின்றது.

இவ் வம்மையார் இலக்கணத்தில் மிகவும் வல்லவர் என்பதை முன்னரே கண்டோம். அகத்திணை யொன்றில் பாடும்போது, அதன் புறன் எதுவெனக் கவனமாய்ச் சில சொற்றொடர்கள் வைத்துக் காட்டும் நடை மிகவும் வியக்கத்தக்கதாகின்றது. இத்திருமொழியில் மற்றும் பாடாண்திணையில், கைக்கிளைச் செய்யுள் பாடுவது காண்க.

கஞ்சைக் காய்ந்த கருவில்லி
கடைக்க ணென்னுஞ் சிறுகோலால்
நெஞ்சூ டுருவ ஏவுண்டு
நிலையுந் தளர்ந்து நைவேனை
அஞ்சே லென்னான் அவனொருவன்
அவன்மார் பணிந்த வனமாலை
வஞ்சி யாதே தருமாகில்
மார்பில் கொணர்ந்து புரட்டீரே.

13-வது திருமொழி 8.

இவ்வாறு பாடுதல் "காமப்பகுதி கடவுளும் வரையார், ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர்" என்னும் விதியுளடங்கும்.

இவ்வாறு இலக்கணவரம்பில் சிறப்பாயமைத்து நாயகன்நாயகிபாவனையிற் "நடலைகளெல்லாம் நாகணையானுக்கு" முறையிடுவதும் தொல்காப்பியப் பொருளியலில் கூறியவாறே யாம்.

நோயு * மின்பமும் இருவகை நிலையும்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க வொட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச் [துஞ்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்
அவரவ றுறுபிணி தமபோலச் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்று முரிய வாக
உவம வாயிற் படுத்தலு முவமமோ
டொன்றிடத் திருவர்க்கு முரியபாற் கிளவி

தொல்கா—பொருளியல் 196.

என்பதற்கிசைய ஆண்டாள் திருமொழிகளில் வழுவமைதிகள், அவர் எப்பொருளை நோக்கி அஃறிணைப் பொருள்களிடம் முறையிடுகின்றாரென்பதை வெளியாக்கும். ஆண்டாள் மயில்களை நோக்கி

கணமா மயில்காள் கண்ணபிரான் திருக்கோலம் போ [ன்று
அணிமாநடம்பயின்றுடுகின் றீர்க்குஅடிவீழ்கின்றேன்
பணமாடரவணைப் பற்பலகாலமும் பள்ளிகொள்
மணவாளர் நம்மை வைத்தபரிசிது காண்மினே

11 - ம் திருமொழி 6.

என்று பாடுவது காண்க. இத்திருமொழி முற்றும், பூக்களையும் குயில்களையும், மயில்களையும், மழையையும், கடலையும் நோக்கி முறையிடுவது காணலாம். இவ்வாறே 5-வது திருமொழியாகிய குயிற்பத்தில்,

* நோய் - துன்பம், எட்டன்பகுதி - நகை முதலிய மெய்ப்பாடு எட்டான பகுதிகள் ("நகையே, யழுகை, இளிவரல், மருட்கை - யச்சம், பெருமிதம், வெகுளி யுவகையென் - றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப")

அன்றுலக மளந்தானை யுகந்து
அடிமைக் கணவன் வலிசெய்யத்
தென்றலுந் திங்களு மூடறுத்து
என்னை நலியு முறைமையறியேன்
என்றுமிக் காவி லிருந்திருந்து
என்னைத் ததர்த்தாதேநீ யுங்குயிலே!
இன்று நாராயணனை வரக்கூவாயே
லிங்குத்தை நின்றும் துரப்பேன்.

5-வது திருமொழி 10.

என்று பாடுவதும் காண்க. இவை

எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
யவ்வெழு வகைய வென்மனார் புலவர்.

தொல்கா - பொருளியல் 207.

என்னும் தொல்காப்பிய விதிப்படி பொருந்தும்.

இவ்வாறு ஆண்டாள் பாடியுள பதிகங்களின்கண் தத்துவ ஆராய்ச்சியே நூதன முறைபோல் காணப்படும். ஆண்டாள் அடிமையென்னும் பாவனையில் தென்றலும்திங்களும் துன்புறுத்தும் சிற்றின்ப உருவகத்திலே நாடிருக்கும் பரிசு யாது என்பதை அகத்தின் கண்ணே ஆராய்வார், தனது சுவானுபூதியை வெளியிடாமல் மனோவாக்குக்கு முற்றிலும் அதீதமான பரம்பொருள் இலக்கணத்தையும், அதில் நடமாடும் தன்னிலக்கணத்தையும் மயில்களாடும் ஆட்டம்போல் காட்டி "நாங்கள் எம்மிலிருந் தொட்டிய கச்சங்கம் நானும் அவனும் அறிதும்" என்று கூறி நிரந்தரம் நிலைநிற்க வேண்டிய அந்த அத்துவித ஐக்கியத்தையே புணர்ச்சியென 5-ம் திருமொழியில் கூறுகின்றார். இது

வண்ணம் பசந்து புலம்புறு காலை
யுணர்ந்த போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையில் புணர்க்கவும் பெறுமே

என்னும் தொல்காப்பிய விதிக்கு (பொருளியல் 202) இசைய அடியிற்கண்ட செய்யுட்களில் அமைவது ஆகும். நாணமும்*மடமுமின்றி இப்படிப் பாடினாரென வெறுக்க வேண்டா.

எத்திசையு மமரர் பணிந்தேத்து
மிருடி கேசன் வலிசெய்ய
முத்தன்ன வெண்முறுவல் செய்யவாயும்
முலையும் அழக ழிந்தேன் *
கொத்தலர் காவில் மணித்தடம்
கண்படை கொள்ளுமிளங் குயிலேயேன்
தத்துவனை வரக் கூகிற்றியாகில்
தலையல்லாற் கைம்மா றிலேனே.
பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப்
புணர்வதோ ராசையி னலென்
கொங்கை கிளர்ந்து குமைத்துக்
குதுகலத் தாவியை யாகுலம்செய்யும்
அங்குயிலே யுனக்கென்ன மறைந்துறை
வாழியுஞ் சங்கு மொண்தண்டும்
தங்கிய கையவனை வரக்கூவில்
நீசால தருமம் பெறுதி'

5-வது திருமொழி 6 - 7.

பரம்பொருளிடம் ஆதியில் வதிந்த ஜீவன் மறுபடியும் பரம்பொருளிடத்து நிலைத்து இன்பம் பெற வேண்டுவதும், அதற்குத் துணைக்கருவிகளான அகம் புற உழைப்பு முறையே கூட்டிலிருக்கும் கிளி கோவிந்தனை யழைப்பதுபோலும் சோலையிலுள்ள குயில் கூவுவதுபோலும் இடை விடாது உடல் பொருளாவி மூன்றையும் ஒருங்கே சமர்ப்பித்துக் "கண்ணுறக் கடல் வண்ணனை" வேறு சிந்தனையின்றிக் கூவும் அறமே மஹாமந்திரமாய் மந்திரயோக பூர்த்தியில் நிற்கும் என்பதை ஆண்டாள் உருவகத்தில் காட்டுவது மிகவும் அற்புதமே.

* இப் பதிகங்களைப் பாடியவர் வயதுமுதிர்ந்தவர் என்பதற்கு அகச்சான்று உளவென்று எண்ணலாகும்.

சிதம்பரதேவர் சரிதம்.

[845-வது பக்கத் தொடர்ச்சி]

19. விஜயன் சிதம்பரனைக் காண்பது

இரவிவர்ம்மராஜன் சோமபாலனென்னும் முதன் மந்திரியுடனும் கோமளாங்கனென்னுஞ்சேனாதிபனுடனும் பாலைவனத்தை ஆண்டுவரு மொருநாள் காராக்ரகஞ் சென்று குலசேகரப் பெருமாளையும் விக்ரமசேனனையும் பார்த்து, அவர் சக்ரவர்த்தியும் மந்திரியுமாய் அனுபவித்தசுகத்திற்கும்இப்போது படும்கடுந்துயரத்திற்குஞ் சமப்பட்டதென்று கலகலவென்று சிரித்தான். தேகம்மெலிந்து மனம்வாடி நடப்பதற்குச் சக்தியின்றி வருந்தும் குலசேகரன், இரவிவர்ம்மன் சிரித்ததைக் கண்டு கடவுளை நொந்து, "ஓ கங்காதரா! காமதகனா! பக்தவச்சலா! பரந்தாமா! இதுவுமுன் திருவிளையாட்டோ? ஒன்றுக்குமுதவாதஇவன் நானிட்ட கட்டளைகளைச் சிரசால் வகித்துக் கப்பங்கட்டிஅழகாபுரத்தை எப்போது விட்டகலநேரிடுமோவென்றும், குலசேகரனென்னும் என்நாமங் கேட்டவளவில் நடுநடுங்கியும் இருக்குமிடந்தெரியாது ஓடியொளித்துக் காலங்கழித்துவந்தவன் இப்போது என்னைவென்று சிறையிலடைத்து என்துன்பங்களைக் கண்டு நகைக்கலாயிற்றே. அருமையான என் புதல்வனைப் பரதேசம் போகச்செய்து இந்திரபதவியை யொத்தஎன் இராஜ்யத்தையுமிழந்துஎனக்குயிராயிருக்கும் விக்ரமசேனனையுஞ் சிறையிலடைக்கச்செய்து, என் பிராணநாயகிகளையும் பூர்ணநம்பிக்கை வைத்திருந்த பிரஜைகளையுங் கைவிட்டுச் சத்துருவாற் பரிகசிக்கக் கேட்டுச் சகித்திருக்குமிப் பிராணன் பெரிதாய்விட்டதே. என் செல்வனுக்கு 21 ஆண்டுகளுமாயினவே! இனி ஒரு வருடத்திற்குள் என் கண்மணியை ஒருமுறையேனும்பார்த்து மகிழக்கிடைப்பனோஎன்றெண்ணும் பேதைமனமுடையவனு மிவ்வுலகிலுண்டோ?" என்று பிரலாபிக்கும் அரசனைக் காவலாளிகள் தட்டப் பிறகும் இரவிவர்ம்மன் சிரித்துச் சபையை நாடிச் சென்று சோமபால கோமளாங்கன் முதலிய மந்திரிகளைநோக்கிக் "குலசேகரன் தன்புதல்வனைப்பார்க்கும் ஆவலால் உயிர்விடாதிருக்கின்றானும். அப்புத்திரனைத் தேடிப்பிடிக்கலாகாதா? சும்மாவிருப்பது நலமோ?

சிறிய பாம்பானுலும் பெரியதடியா லடிக்கவேண்டுமென்று கேட்டதில்லையா" என்ருன்.

கோமளாங்கன் வணங்கி, "அப்பனே! சிதம்பரனென்னும் ஓரே புத்திரன் சத்துருவால் இருபத்திரண்டாம் வயதி லிறக்க வேண்டியவன் உயிருடனெங்கிருக்கினும் வதைப்பது என் வேலை" என்று ரோஷத்துடனெழுந்து தனது உயிர்த்துணைச் சேவகர்களிற் சிலரைப் பல இராஜதானிகட்கும் சிலரைக் காடுவனம் முதலியவற்றிற்கு மனுப்பி அவனைத் தந்திரமாய்ப் பிடித்துவரக் கட்டளையிட்டு வேறு சில போர்ச்சேவகர்களுடன் அனேகவிடங்களில் தானே தேடத்தலைப்பட்டான்.

மாளவதேசத்தில் மஹாதேவரும் விஜயன் விக்ரமகேதுவும் அரச குமாரர்களுடன் யோசித்து ஒரு பெரிய சேனை சேர்த்து வருகையால் கோமளாங்கன் இரவிவர்ம்மன் சபையில் பிரதிக்ஞை செய்து சிதம்பரனைத் தேட முயன்றதைத் தூதுவர்களாற் றெரிந்து வருந்தினர். "மஹாதேவரே, நான் பாலைவனம் விட்டு வந்தநாளாய்த் தூதுவர்களை யனுப்பிச் சிதம்பரனைத் தேடி வருகின்றேன். அவனுடன் நாமும் சேனைகளை நடத்திப் பாலைவனத்தை ஜயித்து அரசனைச் சிறைமீட்டு இரவிவர்மனைக் கழுவேற்ற வேண்டுமென்பதே என் கோரிக்கை இனி அவனைக் காணுமல் என்மனம் நிலைபெருது. எங்கிருக்கினுங் கண்டு அழைத்து வருகின்றேன். நீங்கள் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்திருங்கள்" என்று விஜயன் மாளவ தேசத்தைவிட்டுப் பல நாடுகளிலுந் தேடிப் பாலைவனஞ் சென்ருன். மஹாதேவர் விடாமுயற்சியுடன் சைன்னியஞ் சேர்த்துவந்தார். ஒருநாள் அவர் மௌனமாயிருப்பதைக் கண்டு விக்ரமகேது அதன் காரணம் வினவ அவன் கோமளாங்கனது உற்ற நண்பனுகையால் நம்பத்தகாதென்ருர். அவன் வணங்கி நம்பும்படி வினயம் பேசினபடியால் "சக்ரவர்த்தி காராக்ரக கஷ்டம் சகியாமல் எங்குப்பிராணனை விடுகிருரோ; நாம் செய்துவரும் முயற்சியை அவருக்குத் தெரிவிப்பதெப்படி யென்று யோசிக்கின்றேன்" என்ருர்.

விக்ரமகேதுமறுமொழிகூருது எழுந்து பாலைவனம் மிகத்துரிதமாய்ச் சென்று ஒரு மாதத்தினுள் திரும்பி மஹாதேவரைக்கண்டு தான் காரக்ரகக் காவலாளர்களுக்குத் திரவியமளித்து வசப்படுத்தி அவர்களிலொருவனுய் வேஷமிட்டு அரசனும் மந்திரியும் படும் துயரங்களைக் கண்டு வருந்தித் தன்வரலாற்றைச் சொல்லி மஹாதேவர் முத்திரையைக் காண்பித்து அவர்கள் வருத்தத்தைக் கொஞ்சம் நீக்கினதாக வுரைத்து அரசன் கணையாழியைக் கொடுக்க அவர் சந்தோஷித்து அவனைப் புகழ்ந்து கணையாழியை அரசபத்தினிகட்கனுப்ப அவர்கள் துன்புற்று அதை மார்போடணைத்து முத்தமிட்டுக் கடவுளைப் பிரார்த்தனை செய்திருந்தனர். கோமளாங்கன் தூதுவர்கள் வரின் அவர்களைப் பிடித்துச் சிறையிடக் காவலாளிகளை ஏவி யாவரும் ஜாக்ரதையா யிருந்தனர்.

விஜயன் பாலைவனஞ்சென்று விக்ரமசேனன் தூதுவர்களி லொருவனை யடுத்து விசாரிக்கச் சிதம்பரசேகரன் மூகாம்பிகை வனத்திற் றவம்புரிந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்,மற்றென்றுமறியேனெனக் கோமளாங்கனை யறிவிக்காதிருக்கத் திட்டஞ்செய்து அதிக கஷ்டத்துடன் மூகாம்பிகை சென்று அம்மன் சன்னிதியில் நமஸ்கரித்துத் துதித்து வருபவர்களைக் கவனித்துவந்தான். அப்பொழுது இரண்டொரு நாட்களிற் பிரதோஷம் வரவே சூர்யாஸ்தமனத்தில் அநேக மகான்கள் தரிசனூர்த்தம் சன்னிதிசென்று போற்றித் துதிக்கும் கோஷங்கேட்டுச் சுற்றிப்பார்க்கையிற் சிதம்பரனும் புகழேந்தியு மோர் மூலையில் நின்று தரிசிப்பதைக்கண்டு சந்தேகித்து அவர்கள் சன்னிதியினின்று திரும்பும்போது தொடர்ந்து ஆசிரமத்தில் அவர்களுக்குப் புலப்படும்படி வந்து எதிரில் நின்ருன். "நீர் யாவர்? இரவில் இங்கு வருவானேன்" என்று புகழேந்தி வினவ, "யானொரு பரதேசி; அம்மன் தரிசனூர்த்தம் வந்தேன். இரவில் வழிதப்பி இங்கு வந்துவிட்டேன். இரவுபோக்க ஓரிடந்தரவேண்டுகிறேன்" எனப் புகழேந்தி அவனுக்கோரிடம் காண்பித்துக் கந்தமூலங்க ளளித்து நித்திரை போம்படி சொல்லிச் சிதம்பரனுக்கு வழக்கப்படி செய்யவேண்டிய பணிவிடைகள் செய்துகொண்டு விஜயனைக் கவனித்து நித்திரையின்றி நடப்பதை எதிர்பார்த்திருந்தான். விஜயன் சற்றுநேரம் அவர்கள் சம்பாஷணைகளையும் செய்கைகளையும் கவனித்து இன்னுரென்று தெரிந்துகொள்ளக்கூடாமையாலும் களைமேலிட்டதாலும் நித்திரை போனுன். உதயத்திற் புகழேந்தி தன்னை அதிஜாக்ரதையாய்க் கவனிப்பதை யுணர்ந்து ஆசிரமமடைந்து தந்திரமாய், "சிதம்பரசேகரப் பெருமாள் வாழி, புகழேந்தி வாழி" எனவே, இருவரும் ஆச்சரியப்பட்டு "இங்கு எங்களைத் தெரிந்தவர்போல் வாழி கூறும் நீர்யாவர். அம்மன்சன்னிதியேகாமல் மறுபடியுமிங்கு வருவானேன்,' என்று புகழேந்தி வினவச் சந்தேகங்கள் நீங்கினவன்போற் சிதம்பரனைப் பார்த்துத் தன் வரலாற்றையுங் குலசேகரப்பெருமாள் விக்ரமசேனன் விர்த்தாந்தங்களையும் ஆதியோடந்தமாய்ப் புகன்று மாளவதேசத்தில் நடத்திவரும் விஷயங்களையுங் கூறி இனி க்ஷணமேனும் காலந்தாழாது அரசனையும் மந்திரியையும் சிறைமீட்க முயற்சிசெய்ய வேண்டினுன். தம் தந்தையர் சண்டையிற்றேல்வியடைந்து சிறைப்பட்டுத்துன்புறுவதை யுணர்ந்து இருவரும் பிரலாபித்து மனம்நொந்து பிறகு தேறித்திடங்கொண்டு சிதம்பரன் மௌனமாயிருக்க விஜயன் சந்தேகங்கள் யாவும் நீங்கினவனுய் மறுபடியும் குலசேகரப்பெருமாள் அனுபவிக்கும் கஷ்டங்களை விஸ்தரித்துக் கூறியும் பேசாதிருத்தலைக்கண்டு, "தகப்பனைச் சிறைமீட்காப்பிள்ளை ஸ்தாவரங்கட் கொப்பாவான் "என்று பல சாஸ்திரக் கோட்பாடுகளை யுரைத்துவருந்த அவன் சலியா மனத்துடன் தியானத்திருக்கக்கண்டு அதட்டிச் சில துஷ்ட வசனங்களை யுரைக்க, அதற்கும் மௌனமாயிருப்பதைப் பார்த்ததிசயித்து "இவன் பெரிய யோகி இந்திரியஜயம் பெற்றவன். பிள்ளையானு லிப்படியல்லவோ இருக்கவேண்டும்" என்ருனந்தமடைந்து அவ்விடத்தே வசித்துச் சிதம்பரனை அவன் நிழலைப்போல் எங்குச் செல்லினும் தொடர்ந்து வற்புறுத்தியும் மனமிளகாமையைக் கண்டு ஒருநா ளவன்பாதத்தில் நமஸ்கரித்து, "ஓர் வரந் தரவேண்டும்" என்ருன். சிதம்பரன் புன்னகைசெய்து, "நான் என்னவரங் கொடுக்கமாட்டுவேன். நீர் ஊர்நோக்கிச் செல்லும்" என்று சலனமற்றிருந்தான். "நீ ஓர் அரச புதல்வனுகையால் யாசிப்பதைத் தருவது அரசதர்மம். மறுக்கேல்" எனச் சிதம்பரன் விஜயனை உற்றுநோக்கி, "ஐயனே! உலகத்தையும் அன்னை தந்தை பந்துமித்திரன் இகலோக பரலோக இன்பம் முதலிய யாவற்றையும் வெறுத்திருக்கு மெனக்குத் தாய் தந்தையர் யார்? யார் யாருக்குத் தொந்தம்! யுத்தமும் பட்டமும் வேண்டேன். நீரும் அரசனுகையால்—மாளவதேச அரசர்களுடன் சென்று போர்செய்து இரவிவர்ம்மராஜனை ஜயித்துக் குலசேகரப்பெருமாளையும் மந்திரியையும் சிறைமீட்டுப் பட்டங்கட்டி ஆள்வீர்" என்று கூறிச் சமாதியிலிருந்தான். விஜயன் வருத்தமுற்று இவன் சன்னியாசி? என்ன போதிக்கினும் கேளான். மாளவ அரசனையே யேவிச் சேனையை நடத்துவதே தகுதியென்றெண்ணி, அதிதுரிதமாய் மாளவதேச மடைந்தான். சிதம்பரனுக்கு 22-வது ஆண்டு பிறந்துவிட்டதே. இனி யாது விளையுமோ? இப்போதிவ்விடம் விட்டகலலாகாது. விஜயன் கோமளாங்கன் தம்பியன்றே? எப்படி நம்புவதென்றும், பிதாவும் அரசனும் துன்பமடைவது மனதையுறுத்திக் கலக்கப் பலவாறு சிந்தித்து என் செய்வோமென்றும், வருத்தமுற்றிருந்தான் புகழேந்தி.

மஹாதேவர் வற்புறுத்தப் பரமார்த்தகேஸரி தன் தம்பியுடன் யுத்தசன்னத்தனுய்ச் சிதம்பரனை எதிர்பார்த்திருக்கையில் விஜயன் மூகாம்பிகை வனத்தில் நடந்தவை யாவு மெடுத்துரைத்து வருந்த, இராஜபத்னிகள் விசனமடைந்து உயிரிழக்க யத்தனிக்கவே அவர்களுக்குத் தைரியங்கூறி விக்ரமகேதுவைத் தாங்கள் பாலைவனத்தை எதிர்க்கச் சைன்யத்துடன் செல்வதை அரசனுக் குரைத்துவரத் தூதனுப்பி இராஜபத்னிகளுடன் யாவரும் யுத்தத்திற்குப் பிரயாணப்பட்டு மிக அவசரமாய்ப் பாலைவனத்தை நோக்கிச் சென்றனர்.

கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[837-வது பக்கத் தொடர்ச்சி]

*குறுந்தொகை— இந்நூல் சங்கநூற்றெகுதிகளுள் ஒன்ருய எட்டுத்தொகுதியினுள் ஒன்ருகும். இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய 402 அகவற்பாக்களையுடையது. இவற்றுள் முதற்பாவாகிய கடவுள் வாழ்த்து பாரதம்பாடிய பெருந்தேவனூராலும், மற்றை 401 பாக்கள் திப்புத்தோளார் முதல் அம்மூவனூர் இறுதியாக உள்ள புலவர் இருநூற்று நால்வராலும் இயற்றப்பட்டுள்ளன. அகத்தின் பகுதிகளையே பொருளாக உடையது. மேற்கூறிய அகவற்பாக்கள் நாலடிச்சிற்றெல்லையும் எட்டடிப்பேரெல்லையும் உள்ளவை. இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இஃது அளவால் தொகுக்கப்பட்டது. இந்நூலில் இருபது பாக்கள் நீங்க ஏனையவற்றுக்குப் பேராசிரியர் பொருளெழுதியுள்ளாரென்றும், அவர் விடுத்த இருபது பாக்களுக்கும் நச்சினுர்க்கினியர் பொருளெழுதினுரென்றும் பழைய பாடல்கள் சான்று பகர்கின்றன.

பாரதொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னுர்க்கினிய மே.

நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்

இவை, நச்சினுர்க்கினிய ருரைச்சிறப்புப் பாயிரம். இந்நூற்கு இப் புலவர்பெருமக்களாகிய உரையாசிரியரிருவரும் எழுதிய உரைகள் இப்போது கிடைத்தில. இனி, இந்நூலின்கண் வரும் செய்யுள் வருணனையொன்றை யெடுத்துக் கந்தபுராணத்தில் வரும் கவியுடன் றொடர்புபடுத்துக் கூறிச் செல்வாம்.

(குறிஞ்சி)

[இது, தலைமகள் ஆற்றுவிக்குந் தோழிக்குச் சொல்லியது] என்பது வரைவிடை ஆற்ருளாகிய தலைமகள், ஆற்றுவிக்குந் தோழிக்கு, "தோழி, நாடனெடு கலந்த நட்பு, பிரிவின்ருயின் நன்று; அது பெற்றிலேன்" என்று ஆற்ருமை தோன்றக் கூருநிற்றல்.

[கோவேங்கைப் பெருங்கதவனுர் பாடியது.]
அம்ம வாழி தோழி நம்மொடு
பிரிவின் ருயி னன்றுமற் றில்ல
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்

---

* இந்நூல் 'கலாநிலயம்' (1930 ஆண்டுத் தொகுதியில்) முற்றும் உரையுடன் வெளிவந்துள்ளது. தனிப்புத்தகமாகக் கிடைப்பதரிதாதலின், அன்பராயினுர் 1930ஆ கலாநிலயத் தொகுதியை வாங்கி வைத்துக்கொள்ளுதல் மிகவும் நலமாம். வாணியம்பாடி கல்லூரியில் தமிழ்ப்புலவராயிருந்த பண்டிதர் அரங்கசாமி ஐயங்காரவர்கள் உரையுடனிதனை (1915ம்) ஆண்டில் வெளிப்படுத்தியிருந்தார்கள். எனினும் இப்போது அப்பிரதி கிடைத்தலரிது. ஷை நூலில் வரும் 'வேதின வெரிநின் ஓதிமுது போத்து' என்ற தொடரில் 'வேதின' என்ற சொற்கு வெப்பங்கொண்ட என்று ஷை ஐயங்காரவர்களும், 'கலாநிலய'க் குறுந்தொகை யுரையாசிரியரவர்களும் உரையிட்டுள்ளனர். ஓந்தியின் மேற்புறம் மிக வெப்பமுடையதாகலின் இருவருரைகளும் மிகப் பொருந்துவனவே யாம். ஓந்தியின் மேற்புறம் பல நிறங்களாகக் காணப்படுதலின் James Merrick என்ற ஆங்கிலப் புலவரொருவர் தங்கவியிற் குறித்தவாறே இதற்குப் பொருத்தமாகப் பிறிதோர் உரையும் அமைவதாயுளது. அது 'வேதின - நிறம் வேறுபடுகின்ற, வெரிநின் - முதுகையுடைய, ஓதி - ஓந்தி' என்பதே. ஓதின, என்று பெயரெச்சம் வருவதுபோல, வேது என்ற பகுதியினடியாக 'வேதின' என்று பெயரெச்சம் வந்ததென்க. (வேதுதல்-பேதப்படுதல், பேதுதல் என்ற வடசொல்லின் திரிபு. 'வேதித்துவிற்றுண்ணலாம்,' என்றும் 'வேதியா இறுவதே அன்றி வெண்மதிப் பாதியான் பிடித்தவில் பற்றப்போதுமோ" என்றும், ஆண்டகை தன் யோதிரமடுத்த பொருளெல்லாம், தீண்டளவில் வேதிகை செய் தெய்வமணி கொல்லோ' என்றும் வரும் இடங்களில் இச்சொல் இப்பொருளில் வருதல் கண்டுகொள்க. மேனுட்டார் பெரிதும் விரும்புகின்ற இயற்கை வருணனை நுட்பங்களைக் குறுந்தொகை யென்னு நூலிற் பரக்கக் காணலாம். இத்தகைய நூலையச்சிட்டுத் தம் பத்திரிகையில் வெளிப்படுத்திய கலாநிலயத்தாரது நன்றி தமிழர்களால் பொன்னேபோற் போற்றத்தகுவ தொன்ருமென்க. இந்நூல் வெளிவந்துள்ள 1930 ஆண்டுத் தொகுதியை வரவழைத்துக்கொள்ளுதலே, தமிழன்பர் அன்னுர்க்குச் செய்யும் கைம்மாருமென்பது எனது கருத்து.

பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொரு திரங்குங் கதம்வீ ழருவி
நிலங்கொள் பாம்பி னிழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே.

[குறிஞ்சிநிலத்துத் தங்கிய நெடிய தாளையுடைய வேங்கை மரத்தின் பூக்களையுடைய அசையும் கிளைவருந்தத் தாக்கிக் கல்லில்மோதி ஒலிக்கும் சீற்றத்துடன் விழும் அருவி, நிலத்து (இறங்குதலைக்) கொள்ளும் பாம்பினைப்போலக் கீழிறங்கி யோடிவருகின்ற விலங்குகள் நிறைந்த மலைநாடனொடு கலந்ததனு லான நட்புத்தான், கேட்பாயாக,தோழி! நம்மொடு பிரிதலில்லாயின் நன்று - அது கழிந்தது; என்பது இச்செய்யுளின் பொழிப்புரை]

[வாழி, தில்ல அசைநிலைகள். மன் - கழிவு. அருவி குறிஞ்சி நிலத்துள்ள வேங்கையின் மலருள்ளகிளை வருந்தத் தாக்கிக் கல்லோடு மோதிக் கீழிறங்கு மாறுபோல, மலைநாடன் என் மனையிடத்திருந்த எனது சிறந்த நலத்தை வருந்தத் திளைத்து, வலிதாகக் கூறிய நின்னேடும் யாறு பட்டு மனஞ் சென்றாங்கே பிரிந்து சென்றிட்டான் என்பது இதன் உள்ளுறையாதல் காணத்தக்கது. நிலங்கொள் பாம்பின் என்ற வினையுவமம் உள்ளுறை யுவமத்திற்குச் சிறப்புக் கொடுத்து நின்றது.]

மலையிலிருந்து நிலம்நோக்கி யிழிந்துவரும் அருவி வீழ்ச்சிக்கு நிலத்து இறங்குதலைக் கொள்ளும் பாம்பை யுவமித்திருப்பது எத்துணைப் பொருத்தமாகவும் இயற்கையாகவும் இருக்கின்றது பாருங்கள்! அலைகளை யுயர்த்தியும் தாழ்த்தியும் சுழித்தும் நெளிந்து நெளிந்து சலசலப்புச் சத்தத்துடன் அருவி மலையினின்று இழிந்துவரல், அங்ஙனமே படத்துடன் கூடிய தன் சிரத்தைத் தூக்கியும் தாழ்த்தியும் வளைத்தும் உடலைக் கோணலாக நெளித்தும் சீற்றரவத்துடன் நிலத்தோடும் பாம்பிற்கு உவமையாக அமைதல் மிகப் பொருத்தமேயாம்.

இங்ஙனமே, புண்ணிய நதியாகிய காவிரி, தமிழ் முனிவராகிய அகத்தியனாது கமண்டலத்திருந்து காக உருக்கொண்ட கணேசமூர்த்தியால் கவிழ்க்கப்பட்டுப் பூவுலகின்கண் பாயத்தொடங்கிற்றென்ற சந்தர்ப்பத்தில் நம் கவியரசர் வெகு அழகாகப் புனைந்து எழுதியுள்ளார். அது

பண்டொரு தந்தி யானேன்
 படர்சிறைப் புள்ளாய்த் தள்ளக்
குண்டிகை யிருந்த நீத்தம்
 குவலயம் படர்ந்த பான்மை
எண்டருந் தடையால் வல்லோன்
 இருங்கடத் திட்ட பாந்தள்
மண்டலத் தொருவன் நீப்ப
 வழிக்கொளல் போன்ற தன்றே.

என்ற பாசுரமே யாம் — கந்தபுராணம், அசுரகாண்டம், இந்திரனருச்சனைப் படலம். செய்யுள் 2.

[ஒப்பற்ற யானைவடிவங் கொண்டவனை விநாயகக் கடவுள் முன்பு,பறக்கின்ற இறகுகளையுடைய காக்கையென்னும் பறவையின் வடிவங் கொண்டு (சென்று) கவிழ்த்துவிட்டதனால், (அகத்திய முனிவரது) கரகத்தில் அடைபட்டிருந்த காவேரி தீர்த்தம், நிலவுலகத்திற் பரந்து சென்ற தன்மையானது (யாவராலும்) நன்கு மதிக்கத்தக்க தடைசெய்வதில் வல்லவனொருவன் (தனது மந்திர சக்தியால்) பெரிய குடத்தில் இட்டுவைத்திருந்ததொரு பாம்பு, உலகத்தில் வேறொருவன் (வந்து) கட்டவிழ்த்து விட்டதனால் அக்குடத்தை விட்டு நீங்கிச் செல்லுதலைப் போன்றது, என்பது பொழிப்புரை. தடையால்வல்லோன் - அகத்தியன், தடையுற்றிருந்த சர்ப்பம் - காவிரி, குடம் - கரகம், அத்தடையை விடுவித்தவன் - விநாயகன், என உவமைப்பொருத்தம் கண்டுகொள்க.] அகத்தியர் கமண்டலத்திலிருந்து கணேசர் கவிழ்த்துவிடப் பெருகியதால், இவ் வாறு, 'இருங்கடத்திட்ட பாந்தள் மண்டலத் தொருவ னீப்ப வழிக்கொளல் போன்றதன்றே' என்று பொருத்தமான உவமங் கொடுத்து வருணிக்க வேண்டியதாயிற்று. பாம்பாதிய விட ஜந்துக்கள் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு வலியற்றடங்கிக் கிடக்கும் பான்மை யிதனாற்போதரல் பெரிதுங் கருதற் பாற்றும்.

உள்ளதுள்ளவாறே பலிக்கும் பான்மைகொண்ட தமிழ்ச் செய்யுளை, ஆரிடச் செய்யுளென்பர் ஆன்றோர்

மிக்குங் குறைந்தும் வரினு மொருபுடை
ஒப்புமை நோக்கி யொழிந்தவுங் கொளலே

என்ற யாப்பருங்கலச் சூத்திர வுரையில் ஆரிடச்செய்யுளை விளக்குமிடத்து,

ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவாச்—சீரிய
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்போரான் கச்சிப் பொலிவு.

உடையராய்ச் சென்றக்கா லூரெல்லாஞ் சுற்றம்
முடைவராய்க் கோலூன்றிச் சென்றக்காற்-சுற்ற
முடையானும் வேறு படும்.

கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் குருதியி னுளை கிடப்பதே-கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பண்ணுள்
அழுதகண் ணீர்துடைத்த கை.

என்ற இம்மூன்று செய்யுட்களையும் எடுத்துக்காட்டி, 'என்றித் தொடக்கத்துப் பெருஞ்சித்திரனார் செய்யுளும் ஔவையார் செய்யுளும் பத்தினிச் செய்யுளும் முதலாகவுடையன வெல்லாம் எப்பாற்படுமெனின், ஆரிடப்போலியென்றும் ஆரிடவாசகமென்றும் வழங்கப்படுமென்க இவைகளெல்லாம் இருடிகளல்லா ஏனையோராகி மனத்தது பாடவும், ஆகவும், கெடவும் பாடல்தரும் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர் பெருந்தலைச்சாத்தர் தொடக்கத்தோராலும், ஆரிடச் செய்யுட்போல மிகவும் குறையவும் பாடப்படுவன எனக் கொள்க. என்னை?

'மனத்தது பாடு மாண்பி னோரும்
சினத்திற் கெடப்பாடுஞ் செவ்வி யோரு
முனிக்கணச் செய்யுள் மொழியவும் பெறும்'

என்பது பாட்டியன் மரபாகலின்' என, அவ் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் நன்கு விரித்துரைத்திருப்பனகொண்டு இவ் வாரிடப்பாக்களின் தெய்வீக மகிமையமையப் பாடியிருக்கின்றனரெனின், நம் மனோரனைவரும் உய்தற்கென்றே அவதாரஞ் செய்த தேவாரப் பெரியோர்களும், ஆழ்வாராதி யாசாரியர்களும் தெய்வீக நிகழ்ச்சிகளைத் தத்தம தோத்திரப் பாடல்களான் நிறுவினரெனற்குச் சற்றேனு மைய முண்டுகொல்லோ ? ஒரு சிறிதுமின்று மென்க.

நக்கீரனார் சங்கத்து வீற்றிருக்குங்கால், வடமொழி வல்ல கொண்டானென்னுங் குயவன் பட்டிமண்டபமேறி வடமொழியே சிறந்தது, தமிழ் அற்றன்று எனத் தமிழை யிகழ்ந்து கூறினனாக, அதுகேட்ட

புலவரேறு தமிழைப்பழித்த காரணத்தால் நின்னுயிர் போம்படி பாடுவல் என்று,

'முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரவலிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டன்
ஆனந்தஞ் சேர்கசுவா கா'

எனக் கூறலும், அக்குயவன் அவ்விடத்தில் வீழ்ந்து உயிர்நீங்கினன். அதுகண்ட ஏனையோர் வேண்டவே,

'ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா'

என்று பாட, அவன் உயிர்பெற்றெழுந்தான்.

'நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப'
(தொல்காப்பியம்—செய்யுளியல்)

என்னுஞ் செய்யுளின் சூத்திரஉரையில், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், இவ்வெண்பாக்களை யெடுத்துக்காட்டி, 'இவை தெற்கில் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு, நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடி இன்னவாறாகுகவெனச் சபித்தற் பொருட்டாய் வந்தமந்திரம் பாட்டாய்வருதலின் அங்கதமாயின,' என்று கூறிப் போந்தனர். இக்கருத்துப்பற்றியே திருக்குறள் ஆசிரியரும்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

என்று அருளிச்செய்தார் (நிறைமொழிமாந்தர்-சொல்லிய சொல்லின் பொருள் எங்குங் குறைவில்லாமற் பயன்தரும்படி சொல்லும் ஆற்றலுடையார் மறைமொழி—புறத்தார்க்குப் புலனாகாமல், மறைத்துக் கூறப்படுஞ் சொற்றொடர், எனவே மந்திரமாயிற்று. (நிறைமொழி யென்பதற்கு 'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும், அவ்வப் பயன்களைத் தந்தேவிடும் மொழி' என்றுரையிட்டனர் பரிமேலழகர்.

[தமிழ்ச் செய்யுளடிகள் மந்திரமென்றற் கிலக்காவனவாகி மகிமையுற்று விளங்காநிற்பவும், அவை தம்மை முற்றத்தெளியகில்லாது வாய்போனபடி இகழ்ந்துரைப்பவர்க் கறிவுறுத்த வேண்டியே யாமிதனைக் குறித்து இத்துணை வளர்த்தெழுத நேர்ந்தன மென்க]

பாலியாற்றின் நீர் பள்ளமான வயலிற் பாய்ந்தோடின பான்மையை வருணித்த நம் கவிவேந்தரது அறிவின் மதுகையைச் சிறிது காண்பாம்.

பாம்பளை புகுவ தேபோற்
 பாய்தரும் பரவைத் தெண்ணீர்
தூம்பிடை யணுகு மாற்றாற்
 சொன்முறை தடைசெய் வோரிற்
றும்புடை பெயரா வண்ணம்
 தலைத்தலை தள்ளு மள்ளர்
ஏய்பலோ டார்க்கு மோதை
 யுலகெலா மிறக்கு மாதோ.

(கந்தபுராணம், உற்பத்தி காண்டம், ஆற்றுப் படலம், செய்யுள் 33.)

[பாய்ந்து செல்கின்ற பரவுதலையுடைய தெள்ளிய நீர்வெள்ளமானது, பாம்புகள் புற்றில் நுழைவது போலக் கால்வாய்களில் அடைந்து செல்லும் வகையினால், சொல்லப்பட்ட முறைமைப்படி அந்நீரைத் தடைசெய்பவர்களில், இடம்விட்டுப் பெயராதவிதமாக அவ்வவ்விடங்களில் நீரைத் தடுத்தொதுக்குகின்ற மள்ளர்கள் அங்கலாய்த்தலோடு ஆரவாரிக்கும் பேரோசையானது உலக முழுவதும் சென்றடையும் என்பது இதன் பொழிப்புரையாம்.]

பாம்பு, புற்றில் தலைவைத்து நுழைபு மளவிலேயே தலை மேலாம்படி நிலை மாறுதல் இயல்பு. அதுபோலவே வாய்க்காலிடத்துப் பாய்ந்து விழும் புனல், மேலிருந்து பள்ளத்து வீழ்ந்து உடனே யுயர்தல் இயல்பாகலான் இங்ஙன மேற்ற உவமங் கொடுத்தார்.

மின்னல் மின்னுவதால் தாழை மலருமென்ற 'குறுந்தொகை'க் கவிக்கணுள்ள கருத்தைக் கந்தபுராண ஆசிரியர் அருமையாகக் கொண்டுரைத்துள்ளார். அவற்றை நிரலே பொருந்த வரைவாம்.

கோவதத்தனர் பாடியது] [முல்லை

என்னெனப் படுங்கொல் தோழி மின்னுவரை
வலனேர் பிரங்கு மென்றோ டதனெதிர்
கான மஞ்ஞை கடிப வேங்கும்
ஏதில கலந்த விரண்டற்கென்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே' †

என்பது குறுந்தொகை.

கார்ப்பருவ வரவின்கண் தலைவன் வாராமையால் ஆற்றாளெனத் தன்னைக் குறித்துக் கவன்ற தோழிக்குக் கிழத்தி கூறியது.

(உரை) தலைவர் இன்னும் வாராமைக்குக் காரணம் என்னவென்று கருதுவது ? மின்னல் மின்னுவதால், தாழைகள் வீறுகொண்டுபூத்து (காற்றிலசைந்து) ஒலிக்கின்றன; அம்மின்னலைக் கண்டு அதனெதிரில் காட்டிலுள்ள மயில்கள் மிகவும் கத்துகின்றன. இவ்வாறு ஒன்றற்கொன்று சம்பந்தமின்றி ஒருங்கு நிகழும் இவ்விரண்டு நிகழ்ச்சிகளாலும் எனது பேதைநெஞ்சம் மிகவும் கலங்காநின்றது.

மின்னு - மின் - மின்னல், வலன்நேர்பு - வலிமையுற்று, அல்லது வவன் ஏர்பு - வலிமையுடன் எழுந்து, வலன் - வலம் - வலிமை, தோடு - பூவிதழ், மின்னலைக்கண்டு தாழை பூத்தல் இயல்பாதலின், இங்கே தோடு என்பது 'தாழை' எனக் கொள்ளப்பட்டது. தாழை நெய்தலுக்கும் மயில் குறிஞ்சிக்கும் உரியவாதலின் 'ஏதிலகலந்த இரண்டு' என்றாள்.

இனிக் கந்தபுராணச் செய்யுளை நோக்குவாம்:

மின்பொ ருட்டினாற் கேதகை மலர்ந்திடும் விளங்கு
மென்பொ ருட்டினால் மாமழை சொரிந்திடும் மீட்டும்
பொன்பொ ருட்டினால் யாவு முண்டா மதுபோல்
உன்பொ ருட்டின லவுணர்க்கு மேன்மைய துளதாம்

(கந்தபுராணம்-அசுர காண்டம் - மாயைப் படலம், செய்யுள் 7.)

இந்திராதி தேவர்களது உயர்வினையும் அசுரர்களது தாழ்வினையும் திருநந்திதேவர் இட்ட சாபத்தினையும் உணர்ந்த சுக்கிராசாரியர் சுரசையென்று பெயர் கொண்ட மாயைப் பெண்ணை நோக்கி, "நீ காசிபமுனிவரிடம் அசுரரின் விருத்திகாரணமாகச் சென்றுவர வேண்டுமென்ற சந்தர்ப்பத்தில் இக்கவி வந்துளது. [மின்னல் காரணமாகத் தாழைகள் மலரும், விளங்குகின்ற என்னிமித்தமாக மிக்க மழைகள் பெய்யும், பொன்னினால் எல்லா நன்மையு முண்டாகும்; அத்தன்மைபோல உன் நிமித்தமாக அசுரர்களுக்குச் சிறப்புண்டாகும்] என்பது பொழிப்புரை. இச்செய்யுளின் முதலடி முற்குறித்த குறுந்தொகைப்பாவின் கருத்துடன் அமைந்து ஆயுந்தொறுங் கழிபேரின்பத்தைப் பயக்கின்ற தன்றோ! சங்கநூன்மாண்பும் புலவர்தம் பெருமையும் உள்ளவா றளப்பரியவே.

† கலாநிலயம் 1930 ஆண்டின் தொகுதி, பக்கம் 745

களவியற் காரிகை

[850-வது பக்கத் தொடர்ச்சி]

நாணொடு சூழவென்பது... ...ல்லிதாகச் சொல்லக் கேட்ட தலைமகன் தனதாற்றாமையிற் சொற் பிறவாது நிற்ப முன்னின் றாற்றாமை நீங்க நாணுவந்தடையத் தலைமகள் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலி னேந்திழை தொல்லைப்பன்மா
வங்க மலிகலி நீர்தில்லை வானவ னேர்வருமே.

—திருக்கோவை-95.

கணிநிற வேங்கையுங் கொய்துங் கலாபம் பரப்பிநின்று
மணிநிற மாமயி லாடலுங் காண்டும்வல் லத்துவென்ற
துணிநிற வேன்மன்னன் தென்னர் பிரான்சுடர் தோய்
லணிநிற மால்வரைத் தூநீ ரருவியு மாடுதுமே. [பொதியி

—பாண்டிக்கோவை.

காணாய் தோழிநம் மேனற் றண்புனம்
பேணா மனன போய்ப்புறங் கொடுத்தென
வல்வேற் றானை வெள்வரிச்
செவ்வாய்ப் பாசினங் கவர்ந்துகொண் டனவே.

—பொருளியல்.

வெள்ளிய வள்ளத்து ளேந்தும் விரைச்சுண்ணத்
துள்ளகத்தி னொண்பவளம் வைத்தாங்குத் - தெள்ளுநீர்க்
கானலெல்லாம் பூக்குமே புன்னை களிவண்டு
பானலெல்லாம் பாடுந் துறை.

—கிளவிமாலை.

வங்கமு மீனெறியு மாக்களு மீன்சுறவும்
பொங்குந் திரையும் பொருகடலு - மிங்கிவை
தேர்த்திரளுங் காலாளுந் திண்களிறும் வெம்பரியும்
போர்க்களமும் போலும் பொலிந்து.

—கிளவித்தெளிவு.

இதனை அறியாள் போன்று குறியாள் கூறலென்று சொல்லுவாருமுளர்.

முகம்புகு கிளவி யென்பது தோழி தலைமகளது உடன்பா[ட்]டான் முகங்கண்டு உள்புக்குரைத்தல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

தவளத்த நீறணி யுந்தடந் தோளண்ணல் தன்னொருபா
லவளத்த னாமக னாந்தில்லை யானன் றுரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார் கரத்தகண் ணார்தழையுந்
துவளத் தகுவன வோசுரும் பார்குழற் றாமொழியே.

—திருக்கோவை - 112.

பன்னிய தீந்தமிழ் வேந்தன்
பராங்குசன் பாழிவென்ற
மன்னிய சீர்மன்னன் கொல்லிநம்
வார்புனங் கட்டழித்துத்
தின்னிய வந்த களிறு
கடிந்த சிலம்பன்றந்த
பொன்னியல் பூண்மணங் கைவர
வோமற்றிப் பூந்தழையே.

—பாண்டிக்கோவை.

சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
வலங்குகுலைக் காந்த ளுண்டித் தாதுகக்
கன்றுதாய் மருளுங் குன்ற நாடன்
உடுக்குந் தழைதந் தனனே யாமஃ
துடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற்
கேளிடைக் கேடஞ் சுதுமே யாயிடை
வாடுப கொல்லோ தாமே யவர்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற்கருந் தழையே.

—நற்றிணை - 359.

... ...மேனள் வெந்திறற் களிற்றின்
உறுதுய ரதுவொழித் தோனே நிறனழிந்து
வாடுப கொல்லோ மடந்தை
கோடுயர் அடுக்கத்த கொயற்கருந் தழையே.

—பொருளியல்.

வாடத் தகுமோ மதுவுண்டு வண்டினமு
மாடற் சிறுசுரும்பு மல்லனவுங் — கூடப்
பொருகின்ற வார்குழையாய்.........கட்டித்
தருகின்றேன் பைம்பூந் தழை.

—கிளவித்தெளிவு.

நயந்தமை கூறலென்பது தலைமகட்குத் தழைகொடுத்த தோழி பெயர்த்துந் தலைமகற்குச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

பாசத் தளையறுத் தாண்டுகொண்
டோன்றில்லை யம்பலஞ்சூழ்
தேசத் தனசெம்மல் நீதந்
தனசென்றி யான்கொடுத்தேன்
பேசிற் பெருகுஞ் சுருங்கு
மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிலளன்றிச் செய்யா
தனவில்லை பூந்தழையே.

—திருக்கோவை - 115.

சிலைமிசை வைத்த புலியுங்
கயலுஞ்சென் றேங்குசெம்பொன்
மலைமிசை வைத்த பெருமான்
வரோதையன் வஞ்சியன்னாள்
முலைமிசை வைத்துமென் றோண்மேற்
கிடாயுமொய் பூங்குழல்சேர்
தலைமிசை வைத்துக்கொண் டாளண்ணல்
நீதந்த தண்டழையே.

—பாண்டிக்கோவை.

செங்கையில் வாங்கித் திருமுடி
சேர்த்தி விழியிலொற்றிக்
கொங்கையின் மேல்வைத்துக் கொண்டுநின்
றாள்கும ரித்துறையுங்
கங்கையு மாடுங் கடகளிற்
றான்வங்கர் காவலவன்
பொங்கெயில் சூழ்குடந் தைப்பொருப்
பாதந்த பூந்தழையே.

—வங்கர்கோவை.

தந்து நீயளித்த தண்டழை காண்[ட]லும்
வந்தன ளெதிர்ந்த மடந்தை நெஞ்சம்
மண்மிசை விளங்கிய வழுத்தூர் மதிதா
னுண்ணிய தமிழி னுழைபொரு[ள்] துளித்த
வாய்மொழி யமிழ்த மடுத்தவர் மனமென
யாணிலை பெற்றன் றியானறிந் திலனே.

—பொருளியல்.

சேர்க்கு முலைமேற் சிறியோர் பெரும்பொருள்போற்
பார்க்கு மறைக்கும் பலகாலும்—கார்க்கொடையால்
வன்கைக் கலிகடந்த வன்னாட னெய்தல்வாய்
நின்கைத் தழைவாங்கி நின்று.

—கிளவிவிளக்கம்.

வட்ட முலையில் மலர்க்கண்ணில் வார்குழலிற்
பட்ட படியைப் பகர்வதோ—மட்டுவிரி
கந்தநறுங் கூந்தற் கனங்குழைக்குக் காவலநீ
தந்தநறுஞ் சாரற் றழை.

—கிளவித்தெளிவு.

இவையெல்லாம்

'தன்னுட் குறிப்பினை யருநந் தோழிக்கு
முன்னுறு புணர்ச்சியின் றகலு முண்டே' —இறை-11.

என்னுஞ் சூத்திரத்திற் கண்டுகொள்க.

இடங்காட்டலென்பது நயந்தமை கூறிய தோழி தலைமகற்குக் குறிப்பினாற் பகற்குறியிடங் காட்டுதல். அதற்குச் செய்யுள்:—

வானுழை வாளம் பலத்தரன்
குன்றென்று வட்கிவெய்யோ
னானுழை யாவிரு ளாய்ப்புற
நாப்பண்வண் டாரகைபோற்
றேனுழை நாக மலர்ந்து
திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றாங்கெழில்
காட்டுமொர் கார்ப்பொழிலே.

—திருக்கோவை-116.

மருள்போற் சிறைவண்டு பாடி
நிலவன்ன வார்மணன்மே
லி[ருள்போற் கொ]ழுநிழற் பாயறிந்
தார்கட்கின் றீந்தமிழின்
பொருள்போ லினிதாய்ப் புகழ்மன்னன்
மாறன் பொதியிலர்கோ
னருள்போற்[குளிர்]ந்தன்ன முந்துன்னு
நீர்த்தெங்க ளாடிடமே.

—பாண்டிக்கோவை.

ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்லதி யாவதுந்
துன்னலோ வின்றே பொழிலே யாமெங்
கூழைக் கோர்(ரு)மணஞ் சே(ா)றும்
யாண்டும் வருகுவள் பெரும்பே தையே.

—குறுந்தொகை-113.

கழைகெழு திண்சினைப் பன்மரந் துவன்றிய
மழைதவழ் பூம்பொழில் யாவரும்
விழைதகைத் தம்ம வியன்புன மருங்கே.

—பொருளியல்.

தாது விரிபொழிலுந் தண்டுறையும் புண்டரிகப்
போது விரிகழுநீர்ப் பொய்கைகளு—மீது
நெருக்குங் குருகினமு நெஞ்சுருக நம்மை
யுருக்குந் தனியிடமொன் றுண்டு.

—கிளவித்தெளிவு.

குருகு பெடையென்று கோலப் பணிலத்
தருகணையும் பூங்காவிற் றாகு—முருகவிழும்
பூந்தண்டார்க் கண்டன் புனனாட் டியர்செல்வ
யாந்தண்டா வாழு மிடம். —கண்டனலங்காரம்.

இடத்துய்த்த லென்பது தலைமகற்குத் தோழி யிடங்காட்டி மீண்டுந் தோழி தலைமகளுழைச் சென்று அவளைத் தலைமக னின்றவிடத்துச் செலவிடுத்தல். அதற்குச் செய்யுள்:—

புயல்வள ரூசன்முன் னாடிப்பொன்
னேபின்னைப் போய்ப்பொலியும்
அயல்வளர் குன்றினின் றேற்று
மருவி திருவுருவிற்
கயல்வளர் வாட்கண்ணி போதரு
காதரந் தீர்த்தருளுந்
தையல்வளர் மேனிய னம்பலத்
தான்மலைத் தண்புனத்தே.

—திருக்கோவை-117.

எனலுங் காத்துச் சிலம்பெதிர் கூவி யிளமரப்பூங்
கானமுங் காணுதும் போதரு [illegible]மழ்மதத்த
கானகஞ் சேர்களி வேழப் புடைகங்கை [illegible]
மீனவன்கோலப்பொழில்சூ[illegible]குதப்ப[illegible]

—பாண்டிக்கோவை.

வண்டறை பூங்கா மயிலாட லுஞ்சிறந்த
வெண்டுவலை வாளருவி வீழ்தலுங்—கண்டருள
மாந்தளிரின் சீர்மலைந்த வண்சீ றடிமடவாய்
போந்தருள்க நம்பைம் புனத்து.

—பழம்பாட்டு.

இடத்துய்த் தகறலென்பது தலைமகளைத் தோழியிடத்துய்த்துத் தலைமகனை யெதிர்ப்படுவ ளென்னு மிடத்துத் தான் நீங்குதல். அதற்குச் செய்யுள்:—

நரல்வே யினநின தோட்குடைந் துக்கநன் முத்தஞ்சிந்திப்
பரல்வே யறையுறைக்கும் பஞ்சடிப் பரன்றில்லை யன்னாய்
[குழற்கீங்
வரல்வே[ய்] தருவனிங் கேநிலுங் கேசென்றுன் வார்
குரல்வே யளிமுரல் கொங்கார் தடமலர் கொண்டுவந்தே.

—திருக்கோவை - 119.

அஞ்சிறை வண்டறை காந்தளம்
போதுசென் றியான்றருவன்
பஞ்சுறை சேரல்கு லாய்வரற்
பாற்றன்று பாழியொன்னார்
நெஞ்சுறை யாச்செற்ற வேன்மன்னன்
சார னெடுவரைவாய்
மஞ்சுறை சோலை வளாய்த்தெய்வ
மேவு வரையகமே. —பாண்டிக்கோவை.

முல்லை மலர்நின் முடிமலராக் கொண்டியா
னெல்லை வருவ னெரு[ெ]ப[ா]ருப்பன்—றில்லைநக
ராரணங்கே யிங்கேநி லங்கே வரின்மன்னுஞ்
சூரணங்கே செய்யுந் தொடர்ந்து.

—கிளவித்தெளிவு.

எதிர்ப்படுத லென்பது தலைமகளைப் பகற்குறியிடத்து நிறுத்தித் தோழி நீங்கத் தமியளாய் நின்ற தலைமகளைத் தலைமக னெதிர்ப்படுதல். அதற்குச் செய்யுள்:—

படமா சுணப்பள்ளி யிக்குவ டாக்கிய பங்கயக்கண்
நெடுமா லெனவென்னை நீநினைந் தோநெஞ்சத் தாமரையே
யிடமா யிருக்கலுற் றோதில்லை நின்றவ னீர்ங்கயிலை
வடமார் முலைமட வாய்வந்து வைகிற்றிவ் வார்பொழிற்கே.

—திருக்கோவை - 120.

பங்கய நாண்மலர் தான்வறி தாகப் படித்தலமே
லிங்கிரு பாதங்க ளேவ நடந்துவந் திப்பொழில்வாய்த்
தங்கிய காரண மென்னீ நினைந்து தடவரைவாய்ச் [யே.
செங்கயல் தாம்வைத்த தென்னவ னாட்டன்ன சேயிழை

—பாண்டிக்கோவை.

நடந்த தெங்குநின் றெங்கின நடப்பது
நம்மையோ கமலத்து
மடந்தை யென்பது வந்தது வரவொரு
வாசகந் தந்தாலோ
கடந்த ருங்களிற் றண்ணல்சீ வலவன
களவழி நன்னாட்டிற்
றொடர்ந்து வண்டினம் பின்வர முன்வருந்
துடியிடை மடவீரே. —பழம்பாட்டு.

கோலஞ்செய் துரைத்தலென்பது எதிர்ப்பட்டுப் புணர்ந்த தலைமகன் றலைமகளைக் குழலுங் கோதையுந் திருத்த வாற்றாளாகிய தலைமகட்குத் தலைவனுரைத்தல். அதற்குச் செய்யுள்:—

அளிநீ டளகத்தி னட்டிய தாது மணியணியு [வுண்
மொளிநீர் சுரிகுழற் சூழ்ந்த வொண்மாலையுந் தண்ணற
களிநீ யெனச்செய் தவன்கடற் றில்லையன் னாய்கலங்கல்
தெளிநீ யனையபொன் னேமன்னு கோலந் திருநுதலே.

—திருக்கோவை - 122.

கொடியார் நுணுகிடை தான்புனை கோல மெனக்குலவும்
படிநான் புனைந்தனன் பாவாய் வருந்தல் பறந்தலைவாய்
வடிவா ரிலங்கையில் மன்னரை வென்ற வழுதிசெம்பொ
[illegible]ண் மலரிணை சூடா மடந்தையர் போலயர்ந்தே.

—பாண்டிக்கோவை.

188942
சென்னை-600 0..

பேதுறல் வாழிநின் காதற் றோழி
கைபுனை கோல மெனப்பெற் றன்றே
யையம் யாவது மின்றிப்
பெய்பூங் கோதை பெருங்கவின் கொளலே.

—போநளியல்.

உண்மகிழ்ந் துரைத்தலென்பது இவ்வகை கோலஞ் செய்தற் காற்றுளாகிய தலைமகளை யாற்றுவித்துத் தலைவன் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம் பலவன் திருக்கழலே
கெழுநீர் மையிற்சென்று கிண்கிணி வாய்க்கொள்ளுங் கள்
கழுநீர், மலரிவள் யானதண் கண்மரு விப்பிரியாக்[ளகத்த
கொழுநீர் நறப்பரு கும்பெரு நீர்மை யளிக்குலமே.

—திருக்கோவை - 123.

பூவார் கணியும் புரவியுந் திங்களும் வெங்கடவும்
தேவா தியவிவை தம்முடன் சேரப் பிறந்தெழுந்த
மூவா மருந்திவ ளாங்கது தன்னை முகந்துமுன்ன
ளோவா தருந்து மவர்க[ே]ள யானென்ன வுன்னுவனே.

—பழப்பாட்டு.

மணிநீர்ப் பொய்கை யணிபெற நிவந்த
தாமரை யனையளித் தாமலர்க் கண்ணி
ஞாயிற் றனையன் யானே யாவதும்
வெஞ்சொல் யான்வியந் துரைப்பவு
மெஞ்சாக் கவினிவ ணெய்த லானே.

—போநளியல்.

கொண்டு நீங்க லென்பது இவ்வகை யுணர்த்துந் தலைமகன் நீங்கினவிடத்துத் தோழி தலைமகளைக் கொண்டு நீங்குதல். அதற்குச் செய்யுள்:—

[மிடைந்த
பொன்னனை யான்றில்லைப் பொங்கர வம்புன் சடை
மின்னனை யானருண் மேவலர் போல்மெல் விரல்வருந்த
மென்னனை யாய்மறி யேபறி யேல்வெறி யார்மலர்க
ளின்னன யான்கொணர்ந் தேன்மணந் தாழ்குழற் கேய்
[வனவே.

—திருக்கோவை - 125.

வில்வளர் தானை விறன்மிகும்
வேணாட் டரசர் தம்மைக்
கல்வளர் கானம் புகச்செற்ற
கைதவன் கார்ப்பொழில்வாய்
மெல்விர லேவ மலர்பறி
யாதொழி நீவிரைத்தே
னல்வளர் கூந்தற்கி யான்கொணர்ந்
தேன்மல ராயிழையே.

—பாண்டிக்கோவை.

நறும்பூங் கண்ணியும் பெருந்தண் கோதையும்
நகைவாய்ப் பிணையலு முகைவாய்ச் சூட்டும்
புனைந்தனை யருளல் வேண்டும்
சினங்கெழு கானவன் செழுமட மகளே.

—போநளியல்.

—-❦§❦—

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[846-வதுபக்கத் தொடர்ச்சி]

6. தூதுவிடு சருக்கம்.

431.

மருவினியன மதுவிரிவன மலரணிவன வகுளம்
திருமருவிய செழுநிழலன செங்குழைபன தேமா
வரிமருவிய மதுகரமுண மணம்விரிவன நாகம்
பொரிவிரிவன புதுமலரன புன்குதிர்வன புறனே. 1.

(அப்பொழில்) மரு இனியன மது விரிவன மலர் அணிவன வகுளம் - இனிய வாசனையோடு கூடியவும் தேன்ததும்புவனவுமாகிய மலர்களை அணிந்தனவாகிய மகிழமரங்களும்; திருமருவிய செழுநிழலன செம்குழையென தேமா -அழகு பொருந்திய மிக்க நிழலைத் தருவனவும் செவந் ததளிர்களை உடையனவுமாகிய தேமா மரங்களும்; வரி மருவிய மதுகரம் உண்ண மணம் விரிவன நாகம்- இசைப்பாட்டை யொத்த ரீங்காரத்தைச் செய்யும் வண்டுகள் குடைந்துண்ணுவதால் மலர்கள் மணத்தை வெளிப்பரப்பும் ஞாழல் மரங்களும்; பொரி விரிவு அன்னபுறன் உதிர்வன புதுமலரன புன்கு - பொரிகள் சிந்திக்கிடந்தாற்போன்று பக்கங்களில் உதிர்ந்து கிடப்பனவாகிய புதுப்பூக்களையுடைய புன்க மரங்களும்;

வரி - இசைப்பாட்டு; மதுகரம் - வண்டு, தேனைச் செய்வது என்பது அதன் பொருள். புறன்-புறம், பக்கம். வகுளம், தேமா, முதலிய இதுமுதல் ஐந்துபாட்டிலுள்ள பெயர்கள் 5-ம் செய்யுளி னீற்றடியிலுள்ள 'மலரளவில' என்னும் பயனிலையைக் கொண்டன.

432.

நிழனகுவன நிமிர்தழையன நிறைகுளிரன சாந்தம்
எழினகுவன இளமலரன எழுசண்பக நிகரம்
குழனகுவன மதுகரநிரை குடைவனபல குரவம்
அழனகுவன வலர்நெரிதர அசைநிலையவ சோகம் 2.

நிழல் நகுவன நிமிர்தழையன நிறைகுளிரன சாந்தம் - நிழலைத் தந்து விளங்குவனவாகிய மேல்நிமிர்ந்த பெரிய இலைகளையுடையனவும் நிறைந்த குளிர்ச்சியைக் கொண்டனவுமாகிய சந்தனமரங்களும்; எழில் நகுவன இள மலரன எழு சண்பக நிகரம்-அழகு பொருந்திய புதுப்பூக்களை உடையனவாய் ஓங்கிய சண்பக மரக்கூட்டமும்; குழல் நகுவன மதுகரம் நிரை குடைவன பல குரவம்-(தமது இன்னிசையால்) வேய்குழலைப் பழிக்கும் வண்டுகளின் கூட்டம் குடைந்து (தேனை யுண்ணும்) பல குராமரங்களும்; அழல் நகுவன அலர் நெரிதர அசைநிலையன அசோகம் - நெருப்பின் சுவாலையைப்போல விளங்கும் பூக்கள் நெரியும்படி ஆடிக்கொண்டு நிற்பனவாகிய அசோக மரங்களும்;

நிகரம் - கூட்டம்.

433.

எழுதுருவின எழுதளிரன இணரணிவன இரதம்
இழுதுருவின கொழுமலரிடை எழில்பொலிவன மதுகம்
கழுதுருவின கனலிலையன கழிமடலின கைதை [கம்
பொழுதுருவின வணிபொழிவன பொலிதளிரன புன்னை 3.

எழுது உருவின எழு தளிரன இணர் அணிவன இரதம் - சித்தரித்தாற்போன்ற வடிவை யுடையனவாய்த் தழைத்த தளிர்களை உடையனவும் பூங்கொத்து வரிசைகளை உடையனவுமாகிய மாமரங்களும்; இழுது உருவின கொழு மலரிடை எழில் பொலிவன மதுகம் - தேனை மிகுதியாக உடையனவாகிய செழித்த மலரினால் அழகு விளங்கும் இருப்பை மரங்களும்; கழுது உருவின கனல் இலையன கழிமடலின கைதை- பேய் போன்ற வடிவத்தனவும் நெருங்கிய இலைகளை

உடையனவும் மிகுதியான பூமடல்களையும் உடைய தாழைகளும்; பொழுது உருவின அணிபொழிவன பொலி தளிரன புன்னை - சூரியனையொத்த ஒளிபொருந்தியனவும் அழகைப் பொழிவனவும் விளங்கும் தளிர்களை உடையனவுமாகிய புன்னைமரங்களும்;

இரதம் - மாமரம். இழுது-தேன் (சிந்தா, 3137.) மதுகம் - இருப்பைமரம். பொழுது - பகல்; சூரியனுக்கு ஆகுபெயர். பொழுதுருவின அணிபொழிவின பொழிதளிரன" என்பது பாடபேதம்

434

[வல்
வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌ
நளிர்கொடியன நறுவிரையக நறுமலரன நறவம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி
ஒளிர்கொடியன உயர்திரளிணை டொழுகிணரன ஓடை. 4.

மணம்விரிவன - மணமிக்க (பூக்களையுடையனவான) வளர்கொடியன மல்லிகையொடு மௌவல் - நீண்டுபடர்ந்தகொடிகளான மல்லிகையும் முல்லையும்; நறுவிரை அகம் நறுமலரன நளிர் கொடியன நறவம்-நல்ல வாசனையை உள்ளே கொண்ட நல்ல மலர்களைக் கொண்டனவான குளிர்ந்த கொடிகளானநறைக்கொடியும்; குளிர்கொடியன குழை மாதவி - (விளைந்த) இலையையுடைய குளிர்ந்த கொடியாகிய குருக்கத்தியும்; குவி முகையன கோகுடி-குவிந்த அரும்புகளை உடையனவாகிய கோகுடிக் கொடியும்; திரளிணொடு ஒழுகு இணரன ஒளிர்கொடியன உயர் ஓடை-திரள்திரளாக வரிசையின் மலர்ந்த பூங்கொத்துக்களை உடைய ஒளிவாய்ந்த கொடிகளாகியநீண்ட ஓடையென்னும் கொடிகளும்.

கொகுடி - (விகாரம்) கோகுடி. கோகுடி, ஓடை இவையிரண்டும் பூக்கொடி விசேடம்.

435

[கம்
குடையவிழ்வன கொழுமலரின குளிர்கிளையன கோங்
புடையவிழ்வன புதுமலரன புன்னாகமொ டிலவம்
கடியவிழ்வன கமழ்பாதிரி கலிகளிகைய சாகம்
இடையவிழ்வன மலரளவில இதுபொழிலின தியல்பே. 5.

குடை அவிழ்வு அன்ன கொழு மலரின குளிர் கிளையன கோங்கம் - விரித்த குடையைப் போன்ற செழுமையான மலர்களையுடைய குளிர்ச்சியான கிளைகளை உடையனவாகிய கோங்க மரங்களும்; புடை அவிழ்வன புதுமலரன புன்னாகம்ஓடு இலவம் - பக்கங்களிலே மலர்ந்த புதுப் பூக்களை உடையனவாகிய புன்னாக மரங்களும் இலவமரங்களும்; கடி அவிழ்வன கமழ் பாதிரி - ஒளி விரிந்தனவும் (மணம்) கமழ்வனவுமாகிய பாதிரி மரங்களும்; கலி களிகைய சாகம் - தழைத்தனவும் பூமொட்டுக்களை உடையனவுமாகிய தேக்கு மரங்களும்; இடை அவிழ்வன மலர் அளவில - பொழிலினிடமெங்கும் மலர்ந்த பூக்கள் அளவற்றன ஆகும். இது பொழிலினது இயல்பே - இத்தன்மையதாகும் அந்த வனத்தின் அழகு.

கலி சாகம் - (வினைத்தொகை). கலித்தல் - தழைத்தல். களிகை - கலிகை, பூமொட்டு. கடி - விளக்கம், ஒளிர்வு. சாகம் - தேக்கமரம்.

436

மதுமகிழ்வன மலர்குடைவன மணிவண்டொடு தும்பி
குதிமகிழ்வன குவிகுடையன நுதிகோதுபு குயில்கள்
புதுமகிழ்வனபொழிலிடையன புணர்துணையன பூவை
விதிமகிழ்பவர் மதிமகிழ்வுற விரிவுற்றன விரிவே. 6.

மலர்குடைவன மதுமகிழ்வன மணிவண்டொடு தும்பி - மலர்களைக் குடைந்து தேனை யுண்டு களிப்பனவாகிய நீலமணி போன்ற வண்டுகளோடு தும்பிகளும்; குவிகுடை அன்ன நுதி கோதுபு குதி மகிழ்வன குயில்கள் - மடக்கிய குடையை யொத்த தனது அலகின் நுனியால் தளிர்களைக் கோதி உண்டு தாவிக் குதிக்கும் குயிலினங்களும்; புணர் துணையன புது மகிழ்வன பூவை - புணரும் பெடையோடு கூடிப் புது மகிழ்ச்சியை உற்றவைகளாகிய நாகணவாய்ப் புட்களும்; பொழில் இடையன - பொழிலில் இருப்பனவாகி, விதி மகிழ்பவர் மதி மகிழ்வுஉற விரவுற்றன விரிவே - ஊழ்வினையின் பயனாகிய இன்ப துன்பங்களால் மனம் சலியாது தவநிலையிலே தங்கியவர்களும் பார்த்தால் மனம் மகிழுமாறு பலவகை மரங்களும் பூங்கொடிகளும் பறவைகளும் விரவலுற்றனவாய் விளங்கியது, அந்த விசாலமான பொழில்.

நுதி - நுனி; இங்கே குயிலின் மூக்குக்கு ஆகு பெயராய் வந்தது. பூவை - நாகணவாய்ப்புள். மதி - மனம், உள்ளம். விரிவு - (ஆகுபெயர்)விரிந்த பொழில்.

437

அதுவழகுத னகமகிழ்வுற அலர்தாரவன் அடைய
இதுவழகிய திவண்வருகென எழுபுள்ளொலி யிகவா
விதுவழகுடை விரிபிலையிடை வெறிவிரவிய வேரிப்
பொதியவிழ்வனபுதுமலரணி பொய்கைக்கரைபுக்கான்

அலர் தார் அவன் தன் அகம் மகிழ்வு உற அழகு அது அடைய - விரிந்த பூமாலையை அணிந்த மருசி தனது உள்ளம் களிக்குமாறு அழகிய அந்தச் சோலையை அடைதலும், "இது அழகியது இவண் வருக - 'இது அழகியது இங்கே வருக', என எழு புள் ஒலி இகவாத - என்று (அழைக்கின்றாற் போல) எழுகின்ற பறவையின் கூவொலி நீங்காததும், விரி இலை இடை - விரிந்த இலைகளின் நடுவிலே, வெறி விரவிய வேரி பொதி அவிழ்வன விது அழகு உடை புது மலர் அணி - வாசனை பொருந்திய தேன் பொதிந்த முறுக்கு அவிழ்ந்த சந்திரனது அழகைக் கொண்ட புதிய வெண்டாமரைப் பூக்களை அணிந்த, பொய்கை கரை புக்கான் - பொய்கையின் கரையைச் சேர்ந்தான்.

விது - சந்திரன், 'விதி வழகுடை' என்பது வேறொரு பாடம்.

438

[சிதறுத்
புணர்கொண்டெழு பொய்கைக்கரைபொருதிவலைகள்
துணர்கொண்டன கரைமரநனி துறுமலர்பல தூவா
வணர்கொண்டலமரலுற்றலர் வளர்வண்டினம்எழுவா
இணர்கொண்டெதி ரெழுதென்றலின் எதிர்கொண்
[டதவ் விடமே8.

புணர் கொண்டு எழு பொய்கை கரை அவ்விடம் - புதுமையைக் கொண்டு ஓங்கிய அந்தப் பொய்கையின் கரையாகிய அந்த இடம், பொரு திவலைகள் சிதறு - (குளிர்ச்சி) பொருந்திய நீர்த்திவலைகளை வாரிச் சிந்திக்கொண்டும், கரை மரம் நனி துறு துணர் கொண்டன மலர் பல தூவா - அந்தக் கரையிலுள்ள மரங்களில் மிகுதியாக நெருங்கிய கொத்துக் கொத்தாய்ப் பூத்த பூக்கள் பலவற்றைத் தூவிக் கொண்டும், வணர் கொண்டு அலமரலுற்று அலர் வளர் வண்டு இனம் எழுவா - முடங்கி வளைந்த காலோடு (தேனை நாடிச்) சுழன்று திரிந்து களைத்து மலர்களினகத்தே தூங்கிய வண்டுகளை எழுப்பிக் கொண்டும், இணர் கொண்டு—

பூங்கொத்துக்களை ஏந்திக் கொண்டும், எதிர் எழு தென்றலின் - எதிரே தோன்றிய தென்றற் காற்றால், எதிர் கொண்டது - அவனை வரவேற்றது.

புணர்-புதுமை, வணர்-வளைவு, வளர்வண்டு-வினைத் தொகை. வளர்தல் - கண்வளர்தல், துயில்கொள்ளல். எழுவா - எழுவி, எழுப்பி. சிதரு, தூவா, எழுவா - 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

'கரைமாநனி', 'வணர்கொண்டன மலலுற்றலே' என்பன பாடாந்தரம்.

439.

புனல்விரவியதுளிர்பிதிர்வது புரிமுத்தணிமணன்மேல்
மினல்விரவியசுடர்பொன்னொளி மிளிர்வேதிகைமிசை
[யொண்
கனல்விரவியமணியிடைகன கங்கணியணி திரளின்
அனல்விரவிய வலரணியதோ ரசோகமதுகண்டான் 9.

புரிமுத்து அணி மணல்மேல் - (யாவராலும்)விரும் பப்படும் முத்தைப்போன்ற மணற்பரப்பின்மேல், மின்னல் விரவிய சுடர்பொன் ஒளிமிளிர் - மின்னலி னிடத்துள்ள காந்தியோடுகூடிய பொன்னினொளி விளங்கிய, வேதிகை மிசை - மேடையின்மீது, ஒண் கனல் விரவிய மணி இடை - கனல் போன்ற ஒளிக் கிரணங்களையுடைய மாணிக்கங்களின் இடையிலே, கனகம் அணிதிரளின் - தங்கத்தின் அழகிய திரளைப் போல, புனல்விரவிய துளிர் பிதிர்வது - நீர்த்துளிகள் பொருந்திய தளிர்களின் பிதிர்வை உடையதும், அனல் விரவிய கண்ணி அலர் அணியது - நெருப்பை யொத்த பூங்கொத்துக்களை அணியாகக் கொண்டதும் ஆன, ஓர் அசோகம் அதுகண்டான்-ஒரு அசோக மரத்தை அவன் (எதிரே) கண்டான்

துளிர் - தளிர். புரிமுத்து வினைத்தொகை; புரி 'என்பதை' வலம்புரி என்பதின் குறைபாகக் கொள்ளலும் ஒன்று. கனல் - உவமையாகு பெயர் கணி - கண்ணி; பூங்கொத்து; இதை 'அலர்' என்பதனோடு அன்வயித்துக்கொள்க.

440.

அதனின்னிழ லவனடைதலும் அதுகாவல னுவான்
பொதியின்னவிழ்மலர்சிதறுபு பொலிகென்றுரைபுகலா
மதியின்னொளிவளர்கின்றதொர் மணியின்சிலைகாட்ட
இதுவென்னென இதுவென்னென இனையன்பல
[சொன்னன். 10.

அதன் இன் நிழல் அவன் அடைதலும் - அந்த அசோகமரத்தின் இனிய நிழலை மருசி அணுகலும், அது காவலன் ஆவான் - அந்த வனத்துக்குக் காவலனைவன், பொதியின் அவிழ் மலர் சிதறுபு - கட்ட விழ்ந்த பூக்களைச் சொரிந்து, 'பொலிக' என்று உரை புகலா - நீ நலமுடன் வாழ்வாயாக என்று வாழ்த்துரை மொழிந்து, மதியின் ஒளி வளர்கின்றது ஓர் மணியின் சிலைகாட்ட - (அவன் இருக்குமாறு) சந்திரனது நிலவைப்போன்ற ஒளிபரந்த பளிங்குக் கல்லாசனத்தைக் காட்ட, இது என் என இது என் என- இஃதென்ன இஃதென்ன என்று வியந்து, இனையன் பல சொன்னன் - இவன் பலவாறு புகழ்ந்தான்.

மணி - பளிங்கு, ஸ்படிகம்.

யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[857-வது பக்கத் தொடர்ச்சி]

கோச்சகக்கலி

கொச்சகக் கலிப்பாக்களை ஒருவாறு பாகுபடுத்தி முதலாறுவகைகளைச் சென்றவாரங் கண்டோம். மற்றவைகளுக் கினிச் சில உதாரணங்கள் காணலாம்.

7. இயற்பஃறாழிசைக் கோச்சகம்

தரவும், இடையிடையே தனிச்சொல் பெற்றேனும் பெறாமலேனும் வருகின்ற தாழிசை மூன்றிற்கு மேற்பட்ட பலவும், தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வருவதுடன், அத்தாழிசைகளின்எல்லா அடிகளும் நான்குசீர்களுடையனவாயின், அந்தப் பாட்டு இயல்பஃறாழிசைக் கொச்சகக் கலியாகும் :—

தரவு

தண்மதியோர் முகத்தாளைத் தனியிடத்து ஙனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னுட்கண்
கண்மதியோர்ப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ.

தாழிசை

1

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநில முகைவெண்பற் றுழ்குழ றளர்வாளோ.

2

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.

3

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேன்
மணிநல மகிழ்மேனி மாசொடு மடிவாளோ.

4

நாம்பிரியோ மினியென்று நன்னுதலைப் பிரிவாயேல்
ஒப்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

5

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்துக் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளியது மருளாமோ.

6

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.

தனிச்சொல்

அதனால்

சுரிதகம்

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பற லரியன வெறுக்கையு மற்றே
விழுமிய தறிமதி யறிவாங்
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே.

இது நான்கடித்தரவும், அளவடி இரண்டிரண்டு கொண்ட தாழிசைகள் ஆறும், தனிச்சொல்லும், நான்கடி ஆசிரியச் சுரிதகமும் பெற்று வந்தது. இது தாழிசை இடையிடையேதனிச்சொல் பெறாஇயற்பஃறாழிசைக் கொச்சகம்—தனிச்சொல் பெற்றுவரினும் இயற்பஃறாழிசைக் கொச்சகம் எனக் கொள்க.

8. குறைப்பஃறாழிசைக் கோச்சகம்

மற்றவகைகளில் இயற்பஃறாழிசையே போன்றிருக்கத் தாழிசைகளின் ஈற்றடிகள் சீர்குறைந்தனவா யிருக்குமாயின் அப்பாட்டுக் குறைப்பஃறாழிசைக் கொச்சகம் எனக் கொள்க.

தரவு

ஒருநோக்கம் பகல்செய்ய வொருநோக்க மிருள்செய்ய [கள்
இருநோக்கிற் றெழில்செய்துந் துயில்செய்து மிளைத்துயிர்
கருநோக்கா வகைகருணைக் கண்ணோக்கஞ் செய்ஞ்ஞானத்
திருநோக்க வருநோக்க மிருநோக்குஞ் செயச்செய்து
மருநோக்கம்பொழிற்றில்லைமணிமன்றுணடஞ்செய்வோய்

தாழிசை

1

கடிக்கமலப் பார்வைவைத்துங் கண்ணனர் காணுநின்
அடிக்கமல முடிக்கமல மறிவேமோ.

2 [றலையிழந்த

முத்தொழிலின் முதற்றொழிலோன் முடியிழந்தான்
அத்தொழிலிற் கெனிற்றமியே மாளேமோ.

3

இருக்கோல மிட்டுமின்னு முணராதா லெந்தைநின்
திருக்கோல மியாமுணர்ந்து தேர்வேமோ.

4

நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார் நாவிழந்திங்
கூன்மறைக்க மறைப்புண்டே முணர்வேமோ.

5

தாமடிகண் மறந்துமறித் தலைகொண்டார் கலைவல்ல
மாமடிகள் யாமடிகண் மறவேமோ.

6

பலகலையுங் குலமறையும் பயின்றுணர்ந்தும் பயன்கொள்ளா
துலகலையுஞ் சிலகற்றே மோர்வேமோ.

தனிச்சொல்

அதனால்

சுரிதகம்

அம்மநின் றன்மை யெம்மனோ ருணர்தற்
கரிதே யெளிதே யாதல்
பெரிதே கருணை சிறியே மாட்டே.

இது ஐந்தடித்தரவும், ஈற்றடி குறைந்த ஈரடித் தாழிசைகள் ஆறும், தனிச்சொல்லும், மூன்றடி ஆசிரியச் சுரிதகமும் பெற்றுவந்த குறைப்பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா. தாழிசைகளுக்கிடையிடை தனிச்சொல் பெற்றுவரினும் அதுவேயெனக்கொள்க.

குறிப்பு:—இதுகாறும் கூறப்பெற்ற கொச்சகங்கள் நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பாவின் வேறுபாட்டால் விளைந்த கொச்சகங்கள் என ஒருவாறு கூறலாம். மூன்றடிக்குக் குறையாத தரவு ஒன்றும், அத்தரவினில் அடிகுறைந்தநான்குசீரடிகளுடையதாழிசைமூன்றும் தனிச்சொல் ஒன்றும், வெண்பாவிலேனும் ஆசிரியப் பாவிலேனும் அமைந்த சுரிதகமொன்றும் கொண்டது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும். இந்த நான்குறுப்புக்களிடையே விளைகின்றவேறுபாடு பற்றி இவ்வெண்வகைக் கொச்சகங்களும் ஆயின. மற்ற மூன்று உறுப்புக்களின்றித் தரவு மாத்திரம் நிற்பது இயல்தரவு கொச்சகம்; தரவு மாத்திரம் இரட்டித்து நிற்பது இயல்தரவிணைக் கொச்சகம்; தாழிசை யின்றி, தரவும் தனிச்சொல்லும் சுரிதகமுமாய் நிற்பது சுரிதகத் தரவுக் கொச்சகம்; தரவு இரட்டித்துத் தனிச்சொல்லும் சுரிதகமுமாய் நிற்பது சுரிதகத் தரவிணைக் கொச்சகம்; நான்குறுப்பும் அவைகளுக்குரிய அளவோடும் அமைவதுடன் தாழிசைகளுக்கு இடையிடையே தனிச்சொல்லும் வரப்பெறின் இயல் சிஃறாழிசைக் கொச்சகம்; (இது கொச்சகமாதலின் கலிக்குவரலாகாதென விலக்கப்பட்ட நேரீற்று இயற்சீர்கள் இந்தத் தாழிசைகளில் வருதலுங்கூடும்); தாழிசை மூன்றேயாயினும் அந்தத் தாழிசைகளின் ஈற்றடியிற் சீர் குறைந்திருப்பது குறைச்சிஃறாழிசைக் கொச்சகம்; நான்குறுப்புக்களும் இருக்கத் தாழிசை மூன்றிற்கு மேற்பட்ட பலவாகுமெனின், அத்தாழிசைகளின் ஈற்றடி சீர் குறையாக்கால் இயற்பஃறாழிசைக் கொச்சகமும், சீர் குறையுமாயின் குறைப்பஃறாழிசைக் கொச்சகமுமாகும்.

9. இயன் மயங்கிசைக் கோச்சகம்.

இனி, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவின் வேறுபாடுகள் இயன்மயங்கிசைக் கொச்சங்களாகும். வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவின் இலக்கணத்தைக் கற்றிருக்கின்றீர். அதற்குரிய உறுப்புக்கள் ஆறு:— தரவு ஒன்று, தாழிசை மூன்று, ஈரடியால் நான்கேனும் ஓரடியால் எட்டேனும் கொண்ட அராகம், பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண்களுடைய அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம்.

இவ்வுறுப்புக்கள் ஆறும் இருத்தல் வேண்டும்; இருந்து அவ்வுறப்புக்களிற் சில தத்தமக்குரிய அளவில் மிக்கும் குறைந்தும் மாறியும் வருகின்ற கலிப்பாக்களெல்லாம் இயன்மயங்கிசைக் கொச்சகமாம்.

ஆதலின், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாக்கள், தரவு இரட்டியேனும், தனிச்சொல் பல பெற்றேனும், தாழிசை மூன்றிற்கு மேற்பட்டேனும், அராகவடிகள் மிகுந்தேனுங் குறைந்தேனும், அம்போதரங்க அடிகள் மிகுந்தேனுங் குறைந்தேனும், அல்லது இவ்வுறப்புக்கள் இடமாறி விரவியேனும் வேறுபடுவதெல்லாம் இயன்மயங்கிசைக் கொச்சகக்கலியாகும். இவ்வேறுபாடுகளில் ஒன்றுமட்டுமேனும் பலவேனும் வரலாம். கலம்பகங்களின் முதற்பாட்டுக்கள் இயன் மயங்கிசைக் கொச்சகக்கலியா யிருக்கும்.

தரவு.

1

அன்றினர் சிறத்துற வழுத்துபு பறியா
வன்றிறன் மாரதர் வலம்பட வேந்திய [வென்றே
கொழுங்குருதிப் புனன்மூழ்க்குஞ் சூரிலைவே லினை
யழுங்கனர்கூர் நமன்படைபோன் றமர்புரிமை யுண்கனர்

2

மந்தரவெற் பினைப்பழித்து வயிரமணிப் படுவரைபோற்
சுந்தரமொன் றியபைம்பூட் டிணைத்தோளும் புனலூரன்
மின்றிகழ்தட் டொளியினுமாண் மிளிர்வெய்திக் கதிர்சுலாம்
பொன்றிணிமால் வரைமார்பும் புனையாகப் பொதுவுண்பான்

தாழிசை

1 [வுமிழ்ந்த

தண்ணறும்பூந் துணர்ப்பொதும்பர்த் தமிழ்மலையத் தர
வொண்மணியும் பசுங்கழைவிண் டுகுமணியும் கைக்
[கொண்டே

2

வயிரவழற் பிழம்பெறிகண் மால்யானை மதமாடி
வெயில்விரிபொன் னசும்புதனை மெய்ம்முழுது மட்டித்தே

3

பொறிவரிவண் டுளர்நறுமென் பொதியவீழ்பூ நறவருந்தி
வெறிகமழ்சந் தகிலுகம் வேர்முதல்கீண் டுருட்டியே

4 [மாண்

மாங்கனியும் வாழையின மாழை யங்கனியும் வருக்கையின்
டீங்கனியு மெவ்வழியும் திசைதிசைபோய்த்திரைத்தெடுத்தே

5 [குறைவாற்

முதுமொழிவான் பொருட்டிறங்கண் முழுவதூஉ முதுக்
பொதுவறவுட் கொண்டவரிற் பொருண்முழுதுங் கவர்ந்து
[ராய்.

6

நெடும்புயகின் னுருதுவலே கிலேத்துறுமுன் னெதிர்கதுவிச்
சுடுஞ்சுரந்தன் மருமமெனத் தோன்றுதற்கா யிடையடை [ந்தே.

அராகம்

1 புறவு யருந்தோ டெருவை வெருண்டு
புறலிய பம்பு தொழுதி வழங்கவே.
2 உலவை முளிந்த குடச முழிஞ்சி
விலகு கடம்பு குரவை நெருங்கியே.
3 இரலே மருண்ட பிணேயொ டிரங்க
வருண நிறங்கொண் ஞமலிய வுந்தியே.
4 உலேவில் குறும்பி னெயினர் கணஞ்செ
யிலேயெய் குரம்பை புழுது பெயர்த்திடர்

தாழிசை

1 [காயாவு
குல்லேயுந்தே ளிமிர்கொழும்பொற் கொன்றையுந்தண்
முல்லேயுந்தோன் றியதுவன்ற முல்லேயுளொல் லேயிற்

2 [படர்ந்தே
ஆம்பலந்தீங் குழற்குடவா கன்பாடித் தொழுவுனூட
மோம்படைமூ வினமொன்றிற் கொன்றலக்கற் றிரியவே.

3 [பழித்துக்
குடப்பால்வெண் டயிர்விராய்க் குளிர்புனற்கங் கையைப்
கடற்பாலின் வளமலிந்து கவின்மருதம் குறுகியே.

4
கருமேகத் தொடுசிகரக் கருவரையும் பொருவலவென்
றிருமேரு வெனப்பணேத்த விருகரையி னெடும்பொருதே.

5
சுமெனுறப் படுத்திழுகு சுதைவழித்த மடமுழைபுக்
கிடுமெனுற குழவினேவென் றெழிலியெனக் குளிறியே.

6 [வென்
ளுதியங்கொள் வதற்குளதொன் றுதவினர்தம் முதவியை
நீதலியல் பறிந்தோரி னெழின்மணியேற் பவர்க்குய்த்தே

தனிச்சொல்

எனவாங்கு

அம்போதரங்கம்.

சிற்றெண்.

வண்டானந் துணேபிரிய.
அன்றிலுந்தன் றுணேபிரிய.
தண்டாத வனமிரிய.
தடஞ்சிறைப்புள் ளினமிரிய.
பொய்கைதொறும் பரந்தே.
பொழில்கடொறும் பரந்தே.
செய்கடொறும் பரந்தே.
திரள்கருப்பிற் பரந்தே.

தனிச்சொல்

பரந்த

சுரிதகம்

மதிகலத்தான் மிக்க மறைத்தமிழ்தேர் மாறன்
முதிய மகிழ்மாலே முன்னேன்—குருகூர்த்
ததியர் புகழ்சங் கணித்தெண் டுறையுட்
புதியவா மந்தண் புனல்.

தரவுந் தனிச்சொல்லும் இரண்டாகியும், தாழிசை ஆறுகியும் மிருந்தும், அம்போதரங்கத்தில் சிற்றெண் மாத்திர மிருப்பதால் குறைந்தும் வண்ணகவொத் தாழிசைக் கலிப்பாவினின் றுவேறுபட்ட இது இயன்மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா வாயது.

கலியின்கண் வரலாகா, 'மாழையங்கனியும்' என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர், கொச்சகமாதலின் இதனில் வந்தது.

—⊂⊃*=*⊂⊃—

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—10. ஆறு செல் படலம்.

[855-வது பக்கத் தொடர்ச்சி]

மாற்றிக் கூறும் ஆற்றலோ பெரிது.

தந்தையை யிழந்து சமயனேப் பிரிந்து தளர்ந்திருந்த பரதனே, மன்னனின்றி வையம் வைகல்தான் தொன்மையன்றெனத் துணிந்த நெஞ்சினராய மந்திரக் கிழவரும் தந்திரத்தலேவரும் தரணிபாலரும் முனிவர்களும் வந்து மரபிற்சூழ்ந்திருக்கச் சுமந்திரன் வசிட்டன் முகநோக்குதலும் அந் நோக்கினுல் சுமந்திரன் றுவலனுற்றதை வாக்கினுலன்றியே உணர்ந்தமாதவன் பரதனுக் கொருமொழி தெரியக்கூறினுன். சுமந்திரன் குறித்ததும் வசிட்டன் உரைத்ததும், பரதன் முடிசூட்டிக் கொள்ளல் வேண்டுமெனும் ஒருபொருளே உட்கொண்டிருப்பன. இதனே முன் வான்மீகத்திலும் பின் கம்பர் நூலிலும் விளம்பியவகையில் வேற்றுமை உளது. அங்கு வான்மீகத்தில்,

"ஐயா, தசரதர் சத்தியத்தைக் காப்பாற்றினவராய், தன தானியங்கள் நிறைந்த மிகப்பெரிய பூமியை உமக்குக் கொடுத்துவிட்டுச் சுவர்க்கமடைந்தார்............இராமர் அத் தந்தையாரின் கட்டளேயைக் கைவிட்டுவிடவில்லே. பகைநீங்கிய இந்த இராச்சியம் தந்தையாலுந் தமையனுலும் உமக்குக் கொடுக்கப்பட்டது. ஆகையால் மந்திரிமார் மகிழ்ச்சியடையக் கைக்கொள்ளும். விரைவில் உம்மை அபிஷேகம்பண்ணிவைத்துக்கொள்ளும். கிழக்குத்தேசத்தவரும் மேற்குத் தேசத்தவரும் தெற்குத்தேசத்தவரும் வடக்குத்தேசத்தவரும் கடல் தீவிலிருப்பவரும் கோடிக் கணக்கான இரத்தினங்களே உனக்குக் கொடுக்கவேண்டும்."

என்றனர் வசிட்டர். "பகையற்ற அரசினே நீ ஆள்வதற் குரியவனுயிருக்கின்ருய் ஆதலின் ஆள்க. ஆள்வாயேல் நாற்றிசையினின்றும் நிருபர் நவமணித்திரள்களேக் கொணர்ந்து கொடுக்கும் செல்வ நலங்களேப் பெற்றவனுவாய்" என்ற மொழிகளே பரதனுக்கு ஏற்றவை என்று கருதிய முனிவரர் அறிவிற் கெல்லேயில்லேயாதலின், கம்பாது காலத்திற்குள் வரவர அறிவு வளர்ந்தவராகித் தமிழிலே தன் கருத்தைத் தெரிவிக்கப் புக்கபோது, "காக்குதி உலகம் நின்கடன் இது" எனத் துவக்கலாயினர். துவக்கி, மன்னவர்தரு திறைகளே அளந்து இறப்பதற்கன்றி, "நீதியுந் தருமமும் நிறுவ நீயிதற்குடன்படவேண்டும்" என வற்புறுத்தி, தருமம் என்ற ஒரு பொருளேத் தந்து காட்டுதலின் அருமையையுங் கூறுவார். மன்னவரின்றி வறிதாய வுலகத்தின் தன்மையைக் காட்டி, காவல்செய் தலேவன் இல்லா நாடும் இறைவனில்லாப் பொருளும் இன்மையை நினேவுபடுத்தி,

உந்தையோ விறந்தன னும்மு னீத்தனன்
வந்தது மன்னேதன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரா சளித்தி யன்னது
சிந்தனே யெமக்கெனத் தெரிந்து கூறினுன்.

வான்மீகத்தில் வசிட்டன் துவக்கிய மொழிகளேக் கம்பர் தம் நூலில் முடிவாகக் கொண்டார். மற்று, நிதிக்குவைகள் அரசரால் நல்கப்பெறும் நலத்தினேக் கம்பர் நயந்தெரிந்து விடுத்ததோடு புவிப்பொறையைத் தன்கடமையெனப் பரதன் சுமக்கவேண்டுமென்று முடியின்பால் முடுக்கிய பான்மையும் கம்பர் தம் பாத்திரங்களுக்குக் கொடுத்திருக்கும் குணங்களது சித்திரத்திற் செவ்வனம் சேர்ந்து சிறக்கின்றன.

கேட்டனன் பரதன். உண்ணு நஞ்சம் கொல்கிலது என்னும் எண்ணமுடன் இருந்த துணிவிற்கு இடையூறு வரக்கண்டான். அந் நஞ்சினே நுகர் எனத் தனக்கிப்போது புகட்ட வருகின்றுராதலின், நடுங்கி நாத்தடுமாறி, நாட்ட மிடுங்கி, உயிரொடுங்கிப் புலம்பினனுய்,

மூன்றுல கினுக்கொரு முதல்வ னுய்முதற்
ருேன்றின னிருக்கயான் மகுடஞ் சூடுதல்
சான்றவ ருரைசெயத் தரும மாயதே
ஈன்றவள் செய்கையி னிழுக்குண் டாகுமோ.

[மூன்று உலகினுக்கும் முதல்வனுகி எனக்குமுன் பிறந்த இராமன் இருக்க நான் முடிசூடிக்கொள்வது பெரியவர்கள் பேசக்கூடிய தருமமாகி விட்டது. எனின், இதற்கே முயன்ற என் தாயாகிய கைகேசியின் செய்கையில் என்ன குற்றம் இருக்கக் கூடும்.]

என வியந்தனன். இன்னணம் கைகேசியையே நிகராகிரோ நீர், என முனிந்து அன்னதற்கோர் அமைதியும் உசாவுவான்போல்,

அடைவருங் கொடுமையென் னன்னே செய்கையை
நடைவருந் தன்மைநீர் நன்றி தென்றிரேல்
இடைவருங் காலமீண் டிரண்டு நீத்திது
கடைவருந் தீநெறிக் கலியி னுட்சியோ

[இணேயற்ற கொடுமையையுடைய என் அன்னேயின் காரியத்தை நடத்திவைப்பவர்களாய் நீர் இது தக்கதே என்பீராயின்—நடுவிலுள்ள இரண்டு யுகங்களேயும் கடந்து கடைசியில் வரும் தீயவொழுக்கமுடைய கலியின் ஆட்சி இப்பொழுதே வந்துவிட்டதோ]

என்று, பிற்றைநாள், "எங்கள்மாட்டுக் கலிகாலந்தான் வந்து பரந்ததோ" என்று இராமனே வினவநின்ற வாலியன்ன இன்று பரதன், "உங்கள்மாட்டுக் கலிகாலம் வந்து பரந்ததோ" என வசிட்டராதியோரை வினவ நேர்ந்தது. "கலியினுல் கலங்கியிலீராயின், முன்னவனிருக்கப் பின்னவன் நானிலங்காத்தற்கோருதாரணங் காட்டுமின்" எனச்சாற்றி, "நன்னெறியிதுவென நீர் நவின்றீராயினும், தொன்னெறி முறையில்யான் இராமனேக் கொணர்ந்து அலங்கல்மாமுடி சூட்டக்காண்டிர். இல்லேயேல் நானுங் கானிலுறைந்து கடுந்தவம் புரிவேன். மற்றொருசொல் சொல்வீரேல் மாள்வேன்" என்றனன்.

இது கேட்டவவ் வவையினேர் விம்மிதங்கொண்டு,

ஆன்றபே ரரசனு மிருப்ப வையனும்
என்றனன் மணிமுடி யேந்தல் வேந்தநீ
வான்றொடர் திருவினே மறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளர் நின்னிற் றோன்றினர்.

எனவியந்து, "ஏழினெடேழெனும் உலகம் எஞ்சினும் வாழிய நின்புகழ்" எனப் பரதனே வாழ்த்தினர்.

திருநகர்க் கிராமனே முறைமையில் தருதும் என முரசறைந்து தானேயை விரைவினில் எழுகெனப் பரதன் விளம்புவித்தலும், உயிரில் யாக்கையில் அமிழ்தம் துளித்ததன்ன அச்சொற்கேட்டு, முழுமதியுதயத்திற் கதித்தெழுங் கடலெனக் கிளர்ந்தசேனே முழங்கி முன்போக,

வழிந்தது கேகயன் மடந்தை யாசைபோய்க்
கழிந்தது துயர்நெடுங் காதல் தூண்டவே

[இராமன்பால் மிகுந்த அன்புதூண்ட, கைகேசியின் ஆசையெல்லாம் வழிந்துபோய், பரதன் அரசைக் கைக்கொள்ளவில்லே என்ற துயரமுங் கழிந்து போயிற்று]

எனக் கைகேசியைப் பண்டை வண்ணத்தாளாக்கி உடன் அனுப்ப விரைகின்றனர் கம்பர். அந்தணர் செய்த நல்லறமும் அரக்கர் செய்த பாவமும் இராமனேக் கானகத்திற்குக் கொணர்ந்தன. அன்னதற்குக் கருவியாம்படி கைகேயியின் மனத்தை இமையவர் திரித்திருந்த காரியம் கைகூடிவிட்டபடியால், இன்னமும் அத் தாயதேவியை மா கயத்தியாய் வைத்திருத்தல் மிகையென உணர்ந்த நம் புலவர்பெருந்தகை, இராமன்பால் பண்டிருந்தகாதல் மீண்டுமவளேத் தூண்டும்படிசெய்து, பரதன் அரசாளவேண்டுமென்ற ஆசையையும் அவன் ஆள மறுத்ததால் விளேந்த ஆகுலத்தையும் அவள்நின்று கழுவித் திருத்தியமைக்கின்ற செம்மையின் சிறப்போ சிறியதன்று. "கைகேசியும் சுமித்திரையும் புகழ்பெற்ற கௌசலேயும் மகிழ்ந்தவர்களாய், பிரகாசிக்கும் வாகனமேறி, இராமரைத் திருப்பியழைத்துவரும்பொருட்டுச் சென்ருர்கள்" என்று கூறும் முதனூ லாதாரம்பற்றிக் கம்பரிலிங்கு உரைக்கின்ருராயினும் கைகேசியுடன் சென்ருளென்பதும் சென்றிலளென்பதுங் குறியாது, இனிவரும் நிகழ்ச்சிகளால் நாம் அறிந்துகொள்ளும்வரை, நிறுத்திவிடுவது நாடகச் சுவையூட்டும் சூழ்ச்சிகளி லொன்று.

அளக்கரின் மொய்த்தெழு மனிகம் அயோத்தியினின்று புறப்பட்டது. ஆடையணி சந்தனக்கோலங்கள் பூண்டு மகிழ்சிறந்த மனத்தராய் அப் பரிவாரத்தினர் பரதனேத் தொடர்ந்தனர் என்ற வான்மீகருக்கு மாருகக் கம்பர் துன்பக் கோலத்துடனேயே அத் தானேயை இராகவன்பால் கொண்டு சேர்ப்பிக்கின்ருர். கிழோர் கூட்டத்தில் வாய்திறவா அறிஞர்போல், பம்மையும் துடியும் பேரியும் இயம்பவில்லே. அணிகலங்கள் நீக்கிய மேனிபராய மாதர் பூவுதிர் கொம்பெனப் போயினுர். மாதரார் முலேகளும் ஆடவர் தோள்களும் களபகுங்குமப் பொலிவிழந் திருந்தன. வெற்றி முற்றிய ஒருவன் தன் வேலின் இரத்தக்கறையைக் கழுவிவிட்டதுபோல் மகளிர் கண்கள் மையிடா திருந்தன. விரிமணி மேகலேயும் பரிபுரங்களும் ஆர்க்கில. இச் சேனேயூடு வாட்டமுஞ் சோர்வுமே மலியலாயின.

சேற்றிள மரைமலர் சிதைந்த வாமெனக்
காற்றளம் பொலிதரு கன்னி மாரொடும்
ஏற்றிளம் பிடிக்குல மிகலி யின்னடை
தோற்றன மகளிரைச் சுமப்ப போன்றவே

[சேற்றில் விளேயும் இளம் தாமரைமலர் தோற்றுவிடும்படி அழகிய கால்களுடைய கன்னியரோடு, களிறுகளின் இளம் பெண்யானேகள் நடையில் பந்தயம்போட்டு, அவர் அழகிய நடைக்குத் தோற்றனவாய் அத்தோல்வியின் அபராதமாக அம்மகளிரைச் சுமப்பன போன்றிருந்தன]

என்னுங்கால் அவ்வனிகத் திடையெங்கும் தளர்வொன்றிருந்த தோற்றந் தெரிகின்றது. இராமனைக் காண்போம் என்னும் ஆசையால் அச்சனங்கள் மகிழ்வுடன் சென்றனர் என்பது வான்மீகத்தின்படி தக்கதே. எனினும் இராமனோ ஈரேழாண்டுகள் கழியாமுன் மீளமாட்டான் என்பது அறிந்ததாற் போலும் கம்பரது நூலின்கண் நடந்த அவ்வனிகம் முன்னுற்ற துனியினைத் துறந்திலது. அதுவுமன்றி முன் கோமன் மணத்தினை முன்னிட்டு மிதிலைக் கெழுந்த நாள் களிப்புத் தலைகொளச் சென்றதோர் தானையின் கோலத்தைக் காட்டியிருத்தலால், இராமனை அடவியில் அடையச்சென்ற இச்செவ்வியில் அதன் துன்பத் தோற்றத்தைக் கம்பர் தீட்டிக்காட்டக் கருதினவருமாகலாம். களித்த சிந்தையானது காமஞ்செறிந்த விளையாட்டுச் செய்திகளால் தன்னை இனிது விளர்பிக் கொள்கின்ற தியற்கை. ஆதலின் முன்னர், இராகவன் திருமணங் காணிய படர்ந்த நம்பியர் நங்கையர் திரளினூடு மதனனும் புதுமலர் வாளிகள் தொடுத்துச் சுலாவினன். இப்பொழுதோ, காமனும் அருந்துயர்க் கடலில் மூழ்கினனெனை நிகழ்ந்ததவ் வளவில் சேனையே. காமம் பற்றுக் கருத்தினராய் நடந்தனர். மன்மதன் தான் துயரின் மிகுதியால் தன்தொழிலை மறந்தனனோ; அல்லது அவன் திறமைதான் இன்றிவர்மாட்டுச் செல்லவில்லையோ. முன்னை நாள் ஆடவர் மனத்தொடு உயிரையு முண்ணுமோர் உத்தாசங்க மிட்டொளிக்குங் கூற்றமேயன முனிந்த கொங்கைகள் இன்று இடரொன்று மிழைக்கப்புக்கில என்பாராய கம்பர்பிரான்,

> கனங்குழைக் கைகயன் மகளிற் கண்ணிய
> சினங்கிடந் தெரிதலிற் றீய்ந்த வேகொலாம்
> அனங்கனை கடுங்கணை கடந்த வாடவர்
> மனங்கிடந் துண்கில மகளிர் கொங்கையே

[மன்மதனது ஐந்து கொடிய பாணங்களைக் கடந்த புருடர்களது மனமானது, குழையணிந்த கைகேசியின்பால் விளைந்த கோபத்தீ பற்றி எரிதலால் கரிந்து அழிந்தனவோ-ஆதலாற்றான் மடவார்தம் முலைகள் அவ்வாடவர் மனங்களை உண்ணுதனவாயின போலும்]

என வியப்புற விளம்புகின்றனர். ஆடவர் மனம் காமச்சுவையறக் கருகிப்போயதால் மாதரார் முலைகள் இப்பொழுது அம்மனத்தைப் புசிக்க விரும்பாதனவாயின என்னுமிக் கவிநயம், கவிஞரென்ற பெயருடையவர்களுக்கெலாம் கைவரத் தகுந்ததன்று.

காடுறை வாழ்க்கையைக் கண்ணன் நண்ணவே, இளங் குழவிகள்முதல் காளைப்பருவத்தினர் வரை உற்றதோர் துயரின் மிகுதியை மாதரார் முலைகொண்டு அளந்துகாட்டு மருமையோ பெரியது. பாலகர்களால் உண்ணப்படுவது முலை; மற்றும் அம் முலையே,

> வந்தெ னுடலி னுயிர்வாங்க வா ணுதலாய்
> சந்த வனமுலையே சாலாதோ—பைந்தளிரால்
> நின்கண் புதைத்தனையே நின்வடிவெ லாம்புதைய
> என்கண் புதைத்தருளா யின்று.

[வந்து என்னுடலின் உயிரை உண்ண, ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளே, சந்தனம்பூசிய உன் அழகிய முலையே போதாதோ! ஆதலால் பசுமையான தளிர்போன்ற உன் கைகளால் உனது கண்களை (அவை என்னுயிரை ஊலியாவண்ணம்) பொத்திக்கொள்வதால் எது பயன்? ஆகையால் உன் வடிவெலாம் ஒருங்கே மறையும்படி இப்பொழுது என்கண்களைப் பொத்தியருள்.]

என, தலைமகன் தன்னை வியந்திசைத்த மொழிகளுக்கு நாணிக் கண் புதைத்துநின்ற தலைமகளுக்குத் தலைமகன் உரைத்த பரிசினைக்கூறும் கிளவித்தெளிவுச் செய்யுளில் குறித்தவண்ணம், ஆடவர் உயிரை உண்பதும் ஆகும். அத்தகையமுலை, உண்பதும் உண்ணப்படுவதுமாய இருவினைகளும் இந்நாள் இலவாயின என்பதை நினைவுறச் சூழ்கின்றனர் கம்பர். முன்னர்த் தாயர்தம் கைமறந்த குழவிகள் முலையும் மறந்துண்ணுதொழிந்தன. பின்னர் இன்று, ஆடவர்மனத்தை அம்முலைகளும் உண்ணுதொழிந்தன. இவ்விரண்டிற்கும் காரணம் இராகவன் அடவிசென்றானெனுங் கடுந்துயரமே என்பதை மறவோமெனின் இருவாய்பாட்டிலும் அங்ஙகர மாதர் உண்ணுமுலையினர் ஆய விந்தை அறிதற் கருமையன்று. இத்துணை இன்சுவை சுரக்கும் ஈற்றடியாய், "மனங்கிடந் துண்கில மகளிர் கொங்கையே" எனத் திகழுமிதற்கு, ஆடவர் மனம் மகளிர் கொங்கைகளை உண்ணவில்லை, எனப் பொருள்காணல் பிழையன்றேனும் பொருத்த நயத்தைக் குறைத்ததாகலாம். உண்ணப்படா முலை உண்ணுதது மாயிற்றென்று மாற்றிக் கூறிய கம்பரதாற்றலை இப்பின்னைய உரை மறைத்துவிடுகின்றது.

இவ்வண்ணம் அழுங்கிய மனத்துடன் படர்தரும் சேனையைத் தொடர்ந்து பரதன் புரிசைவாயிலைச் சேர்ந்தனன். இதுகாறும் இச்செய்யுள்களை ஓதிவந்தவர்சிந்தையுந் தளர்ந்திருக்குமாதலின் வேறோர் விளையாட்டைக் காட்டியத் தளர்ச்சியைச் சிறிது தணிப்பான் வேண்டி நாடகநலமுணர்ந்த நம் புலவர், "மந்தரைக் கூற்றமும் வழிச்செல்வாரொடும் முந்தியே போந்தது" எனக் காட்டுகின்றார். கெடுத்ததெல்லாம் கெடுத்துவிட்டு இக்கொடும்பாவிக் கூனிதான் மீண்டுமிங்கு முந்தியே வழிக்கொளப் போந்ததென்னெனச் சினத்தூடேனுஞ் சிரியாதார் இலராகார். எனினும் சத்துருக்கனுக்குச் சிரிப்பினுஞ் சீற்றமே கைம்மிக அழன்று அவளை அந்தரத்தேற்றுவான் பற்றலும், பரதன் அவனை விலக்கி, "நாயகன் முனியுமென்றல்லது அன்னையென்ற கொள்கையாலன்று யான் கைகேசியைக் கொல்லாதுவிட்டது. இக்கூனியை வருத்தினுமெனினும் இராகவன் நம்மை முனிவான்" எனத் தெருட்டி அவனை அழைத்துக்கொண்டு தேர்களுந் துரகமுங் கரிகளுந் தொடரக் காலின் ஏகினன்.

அயோத்தி வந்து பரதன் தன் அன்னையைக் கடிந்துட் சென்றபின் எதிர்ப்பட்ட கூனியைச் சத்துருக்கன் நலிந்தனனென்றம் பரதன்வந்து இக்காரணங்கள் கூறி விலக்கினனென்றும் முதனூல் இந்நிகழ்ச்சியை முன்னரே இயற்றி யிருக்க, அங்கதனைக் கம்பர் உரையாது இதுகாறும் போற்றிவைத்து இப்படலத்தின் இறுதியில், முன் சொன்னவாறு பரதனது பரிவாரத்தினர்தம் பெருந்துயர் கண்டு நைந்திருக்கும் நம்மனோர் மனம் முற்றிலும் இற்றிடாவண்ணம், அந்நிகழ்ச்சியை அமைத்ததாலும், 'மந்தரைக் கூற்றமும் வழிச்செல்வாரொடும் முந்தியே போந்தது' என்னும் அவ்வாசகத்தி லடங்கிய பரிகசத்தாலும், காக்கின்றனர். இடத்தினை மாற்றிக் கூறும் இவ்வாற்றலும் சிறியதன்று. சொல்லிய கதையை நாடகமாகக் காட்டுவார் திறமைக் கேற்றதே இது.

வர்த்தமானம்

தீபாவளிப்பண்டிகையை ஒட்டிச் சென்னையில் அன்னியநாட்டு ஆடை பகிஷ்காரம் நடந்துவருகின்றது.

***

வங்காளக் கிரிமினல்திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அரசப்பிரதிநிதி அனுமதி தந்தார். அதன் பயனாகப் பலர் வங்காளத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

***

ஐதராபாத் நைஸாமின் மூத்த புதல்வருக்கும் துருக்கியின் மாஜி சுல்தானின் புத்திரிக்கும் நவம்பர் கடைசியில்கலியாணம் நடக்குமென்று தெரிகின்றது.

***

ஆப்கனிஸ்தானம் இப்பொழுது புதுப்பிக்கப்படுகின்றதாம். எங்கும் விசாலமான ரஸ்தாக்கள் போடப்படுகின்றன. எலக்டிரிஸிட்டி போடப்பட்டு வருகின்றது. டெலிபோன் வசதிகளும் உண்டாயிருக்கின்றன என்று தெரிகிறது.

***

டாட்டா கம்பனியார், சென்னை பம்பாய் கராச்சி முதலிய இடங்களில் விமானப் போக்குவரவு ஏற்படுத்த முயன்றுவருகின்றனர் என்றும்,சீக்கிரத்தில் விமான மூலம் பிரயாணிகள் போக்குவரவு ஏற்படும் என்றும் பம்பாய்ச் செய்தி கூறுகின்றது.

***

இவ்வருடம் பூரியில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மஹாநாட்டின் தலைமைப்பதவிக்குப் பாபு இராஜேந்திரப் பிரஸாத் பெயரும், சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் பெயரும் பிரேரேபிக்கப்பட் டிருக்கின்றனவென்றும், இருவரில் ஒருவர் தலைவராய் நியமனம் பெறலாம் என்றும் தெரிகின்றது.

***

சென்னைக் கவர்னர் தமது சம்பளத்தில் 100-க்கு 10 வீதம் குறைவு செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கின்றார் என்றும், இதற்குமேல் சம்பளத்தைக் குறைத்துகொள்ளவேண்டிய அவசிய மிருப்பின் அது பற்றி யோசனை செய்வாரென்றும் தெரிகின்றது.

***

1931-வது ஆண்டில் நடந்த வித்வான் பரீட்சையில் முதல்வகுப்பில் தேறிய ஸ்ரீமான் K. சுந்தரமூர்த்தி ஐயருக்குத் திருப்பனந்தாள் மடத்தார் ஏற்படுத்தியுள்ள பரிசு ரூ. 1000 கொடுக்கப்பட்டது. கிறிஸ்தியன்கலாசாலையில் இதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் மந்திரி, ஆனரபில் திவான்பகதூர் குமாரசாமிரெட்டியாரால் இப்பரிசு வழங்கப்பட்டது எனத் தெரிகின்றது.

தானாக வலிந்து வறுமையை யேற்று எளியவர் போல் வாழவேண்டுமென்பதைப்பற்றிக் காந்தியடிகள் சமீபத்தில் லண்டனில் பேசினார் என்றும், வறுமையேற்கும் சங்கம் ஒன்றும் லண்டனில் நிறுவப்படும் என்றும், இவ் வறுமைஇயக்கத்தை நடத்த வேண்டி ஒரு திட்டம் செய்யலாகின்றதென்றும் லண்டன் செய்தி கூறுகின்றது.

***

டக்கா ஜில்லா மாஜிஸ்டிரேட் மிஸ்டர் L. G. டர்னோஎன்பார் வீட்டுக்குத் திரும்புகையில்கடைத்தெருவில்இரண்டுஇளைஞரால்28-10-31இல்சுடப்பட்டார். இவரது கண்ணில் ஒரு குண்டும் மார்பில் ஒரு குண்டும் பட்டன. இப்பொழுது சிகிச்சையில் இருந்துவருகின்றார். 29-10-31இல் கல்கத்தா ஐரோப்பிய சங்கத்தலைவரான E. வில்லியர்ஸ் என்பார், கல்கத்தா கிளைவ் தெருவிலுள்ள தமது கார்யாலயத்தில் இருக்கையில் ஒரு இளைஞன் அவரைச் சுட்டான். வில்லியர்ஸ் வயித்தியசாலையில் இருக்கின்றார், என்று வங்காளச் செய்தி கூறுகின்றது.

***

அமெரிக்கா வாசியான கவுண்டஸ் நில்லா பிரோல்டா என்னும் மாது ஹிந்துமதத்தைத் தழுவினாராம். அவர் எழுதிய ஒரு கடிதச் சுருக்கம் வருமாறு:—"நான் 1908 வருடம் பிறந்தேன். எனக்கு 4 வயது வந்ததுமுதல் எனக்கு இந்தியாவினிடம் ஓர் ஆர்வம் ஏற்பட்டது. இந்தியாவைப்பற்றிப் பேசவும்கேட்கவும் விரும்பிவந்தேன். சிறு பிராயத்திலேயே இந்தியாவிற்குச் செல்ல விரும்பினேன். என்றாலும் என்பெற்றோர்கள் என்னை இந்தியாவிற்கு அனுப்ப மறுத்தனர். வயதுவந்ததும் இந்தியா வந்தேன். இந்து மதம் எனக்கு அரிய உண்மைகளைவிளக்கி அமைதியை அளித்தது. அதன் பயனாக என்னைச் சேர்ந்தாருடன் இந்துமதத்தைத் தழுவினேன்."

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்வஸர்ன், மதுரை.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

நஞ்சன்கூடு பல்பொடி

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்.

18942

KALANILAYAM.
REG. NO.; M'2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது.
676 பக்கங்கள் கொண்டது.
ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்ருகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோகா கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ் ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு 11,51,813.
பிரீமியம் வரும்படி 30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி 7,47,608.
மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினுல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)